ஸ்ரீமத்தென்னாசாரிய

பிரபாவம்

ஸ்ரீ

ஸ்ரீவிஷ்ணுமயம்.

இஃது

புஸ்தகம்.

[illegible]

ஸ்ரீ[illegible] [illegible]
[illegible]
[illegible].

திருமயிலை

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ஸ்ரீமத்தென்னாசாரியர்பிரபாவம்.

இஃது

எழுபத்துநான்குசிம்மாசனபதிகளில்.

ஸ்ரீமத்உபபஎழுந்தருளியிருக்கும்

கோயில்கோமாண்டூர்

இளையவல்லிசிங்கராசாரியர்

திருவடிசம்பந்தியும்

ஸ்ரீகாஞ்சிதேவராஜஸ்வாமிசந்நிதி.

மல்ஜிதருமகர்த்தாவும்

ஸ்ரீபராங்குசவிலாசச்சபாப்பிரசங்கியும்

ஆகிய

இராமாநுஜதாசனென்கின்ற

முடிச்சூர் - அப்பாவுமுதலியாரால்

உபயவேதார்த்தங்களைப்பிரகாசம்பண்ணத்தக்கதாய்

ஸ்ரீமத்உபயஎழுந்தருளியிருக்கும்

ம - கிருஷ்ணமாசாரியரவர்களால்

பார்வையிடப்பட்டு

கோமளநகரில்வசிக்கும்

விச்சூர் - நாதமுனி முதலியாரவர்களால்

இந்து-அச்சுக்கூடத்தில்அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

ஸ்ரீமத்ராமாநுஜர்திருவவதாரதிவ்வியவருஷம்

அ௱சய-க்குச்-

சரியான

சாதாரணஞூ ஆவணிமீ௰௭௨

1850

இந்ததிவ்வியபிரபாவம்.

சென்னைமா நகரைச்சார்ந்த, எழுமூரில், சௌமியஹுப மார்
கழிமாதம் தென்கலையாருக்கும் வடகலையாருக்கும் சம்பவித்தபி
ரசங்கத்தில்தென்னாசாரியருடையபிரபாவத்தைப் பிரகடனஞ்செ
ய்யும்படி இராமாநுஜ சித்தாந்தப் பிரவர்த்தகப் பிரபன்னர்களி
ல் ௱-௱- காஞ்சிபுரம்வெங்கடாசல முதலியார் குமாரர்கேசவமுத
லியார் -ஷியூர்- செல்வப்பெருமாள்கவிராயர்புரசைப்பாக்கம்பசு
புலேடிரங்கைய்யநாயகர் - ஆதிநாரரயண செட்டியார்-கோமள
நகர். உ - அருளாளதாசன் என்கின்றகுருசாமிநாயகர்கிஷ்ணசா
மிநாயகர் முதலாகியவர்களும் சிந்தைகூர்ந்து கேட்டுக்கொண்
டபடியால் இந்தஸ்ரீபாதபுண்டரத்தை யாவரும்எளிதிற் கண்டு
தெளியும்படிடஹிரங்கப்படுத்தலாயிற்று.

ஜீயர்திருவடிகளேசரணம்.

☞ மச்சல - பார்த்தசாரதிநாயகராலெ
அச்சு அடிக்கப்பட்டது.

அட்டவணை.

தென்கலையாகிய திரவிடவேதம் அஞுதியென்று
ம் - வடகலையைப்போல்தென்கலையையும்- பிராம்
மணுள் அத்தியயனம்பண்ணவேணுமென்றும்தெ
ன்கலையை அத்தியயனம்பண்ணவர்களுக்கேவைஷ்
ணவத்வசித்திஎன்றும்சொல்லுகின்றது. (௩)

தென்கலையை அத்தியயனம் பண்ணவர்களுடை
யஇரண்டு ஸ்ரீபாதங்களிலுந் தீர்த்தஞ்சேர்க்கும்ப
டியாய் ஸ்ரீபாஞ்சராத்திரத்தில் பகவத்வசனம்.(௪)

தென்கலையாரோ தானத்துக்குப் பாத்திராளெ
ன்றும்-இவர்கள் நித்தியசூரிகளாலேபூஜிக்கப் படுவ
ர்களென்றும் மூன்றுதலைமுறை திரவிட வெதத்
தைஅத்தியயனம் பண்ணுமல் விட்டவர்களுக்குச்
சொல்லத்தகாத துர்பிராம்மணத்துவஞ் சித்திக்கு
மென்றது. (௫)

திரவிடவேதம்படித்தவர்களை ஆராதித்தவர்கள்
பரமபதத்தை யடைகிருர்களென்றுஞ்-சாதுர்வர்
ணங்களுமதற்குக்கீழ்ப்பட்டவர்களுந்திரவிடவேத
த்தை யப்பியசித்தால் முமுட்சுக்களாய்பூஜிக்கப்
படுவர்களென்றது. (௬)

திராவிடவேதத்வனி எவ்விடத்தில்ஸார்வகாலமும்
உண்டாகின்றதோ அந்தகிராமத்தில் முமுட்சுக்க
ள்வஸிக்கத்தக்கதென்றும்-தென்கலையார் பிரம்ம
ருத்திராதிகளுக்கு லபிக்கவரிதான பரமபதத்
தையடைகிருர்களென்றது. (௭)

திரவிடவேதத்தை இகழ்ச்சிபண்ணி நிந்தித்தவர்கள் துர்மதிகளென்றும் பிரம்மப்பிரளைய பரியந்தங் கும்பீபாகமென்றநரகத்தில் சுடப்படுவர்களென்றது. (அ)

திரவிடவேதத்தை யப்பியசித்தவர்கள் பூமியிலிருந்தேசிறுமுறிச்சீட்டுச் செல்லும்படி பரமம்பதத்தைஆளுவர்களென்றது. (௯)

ஒருஅங்குலம்பத்மபீடத்தோடுகூடினதிருமண்காப்புதரிக்கும்படிசுருதிப்பிரமாணம். (௰௧-௰௪)

பத்மாஸனத்தின்பேரில் விஷ்ணுவின்திருவடிகளைபிரதிஷ்டைப்பண்ணும்படிசுருதியும் புராணமும்சொன்னது. (௰௨)

ஒருஅங்குலம்பாதந்தரிக்கும்படி சுருதிசொன்னத்தை வசிஷடர்சொன்னதும் நாசிகைஎன் பது மூக்கின் மூன்றிலொருபாகமென்றும் அதுமுதல்கேசவனைக்குந் தரிக்கும்படிபாத்மசம்ஹிதையில் பகவான்சொன்னது. (௰௩)

பன்னிரண்டுதிருமண்காப்பும் பாதத்தோடுந்தரித்தவர்கள்விஷ்ணுவுக்கு வல்லபாளாய் பிராட்டியனுக்கிரஹம் பெறுவர்களென்றது. (௰௫)

ஶ்ரீபுண்டரமுடையவர்கள்முக்தியடையும்யோக்கியாளென்றும் - கிரஹபாண்ட பதார்த்தங்களுக்கும் பாதபுண்டரந்தரிக்கும்படியாயும் சந்திரகாந்தவுபாக்கியானத்தில் நாரதர்வசனித்தல். (௰௭)

பாதமில்லாததிருமண்தரித்தவர்கள் துராத்மாக்களென்றும் - நரகத்தையடைவர்களென்றும் - பகவான்தான் ஸந்தோஷிக்கிறதில்லையென்றும் - மூ

தேவி-சந்தோஷிப்பளென்றும் - அவர்களை துரா த்மாக்களென்று நியஜிக்கிறேனென்றும் ஸ்ரீபாஞ் சராத்திரத்தில் பகவானும் பத்மபுராணத்தில்சிவனு ம் பிரம்மாண்டபுராணத்தில் பகவானும் அருளிச் செய்தது. (உ௰௧)

பக்தியுடனேபாதபுண்டரந் தரித்த மாத்திரத்தி ல் எம்பெருமானைப்போலேஆகிறார்களென்றுபிர ம்மாண்டபுராணத்தில்ஸனத்குமாரவசனம்.(உ௬)

சுருதி ஸ்ரீபாஞ்சராத்திர புராணங்களில் பாதபு ண்டரந்தரிககும்படி விதித்தபடியே ஸ்ரீரங்காதி க்ஷேத்திரத்திலும் ஆழ்வார்கள் பூருவாசாரியர்கள் அவதாரஸ்தலங்களினும் ஸ்தாபித்திருக்கின்ற பிறத் தியக்ஷம். (உ௮)

சிகையும் - புண்டரமும் - பூருவர்கள் அனுஷ்டி த்தப்பிரகாரம் அனுஷ்டியாதவர்கள் பதிதாளெ ன்னும்பிரமாணம். (௩௨)

நிர்ஹேதுககிருபையாலீசுவரன்கரசரணாதிஅ வையவங்களுஞ்சாஸ்திரமுங்கொடுத்தது(௩௭)௩௮.

சேதனனுடைய முயற்சியால் மோக்ஷமடைய மாட்டார்களென்றும்-நிர்ஹேதுக கடாக்ஷத்தால் மோட்ச மடைகிறார்களென்றுஞ் சுருதிசொன்ன து. (௩௯)

அந்தசுருதியின்கருத்தைப் புராணங்களில் சாஸ் திரமூலமாய் அவையவங்களாலே உஜ்ஜீவிக்கமாட் டாதவர்கள் திறத்தில்புழுக்குறித்ததை எழுத்தாகக் கருதுவாரைப்போல் மடிமாங்காயிட்டு அக்கியா னசுகிர்தங்களைக் கல்ப்பித்துரக்ஷிக்கிறனென்றது.

(௪௧)முதல்(௪௪)வரைக்கும்.

நிர்ஹேதுககிருபையால் ரக்ஷிக்கிறனென்று திருவாய்மொழியில் முதற்பாசுரமுதல் ஆயிரம் வரைக்குங்குரோடீகரித்துச் சொன்னது(௪௪)௪௫)

இப்படி நிர்ஹேதுககிருபையால் ஈசுவரன்ரக்ஷிப்பதை நினையாதவர்கள் நீசரொன்று திருமங்கையாழ்வார் நிந்தித்தது. (௪௬)

ஸ்வயத்தினத்தில்சேர்ந்தகருமாதிகளால்மோக்ஷமடையமாட்டார்களென்றுசுருதிசொன்னது.(௪அ)

அவ்வர்த்தத்தை ஸ்ரீகீதையில் பதினெட்டுஅத்தியாயங்களில் சொன்னகருமகியான பக்தியோகங்களை நன்றாகவிடச்சொல்லிப் பின்புபிரபத்திநிஷ்டையையுபதேசித்தது. (௪௯)

விசேஷதர்ம்மமான பிரபத்திநிஷ்டையைஸ்தாபிக்கஅவதரிக்கிறேனென்றுகண்ணன்வசனம்.௫௫

பிரபத்திநிஷ்டையைக் குறித்து சுருதிசொன்னது. (௫௬)

கருமங்களில் சேர்ந்ததபசுக்களைப்பார்க்கிலும் பிரபத்திசிலாக்கியமானதபசென்று சுருதிசொன்னது. (௫அ)

ஒருக்கால்பிரபத்தி என்றசரணாகதிபண்ணுவதற்குபிரமாணம். (௬0)

அந்த பிரபத்திஸாதனமாகமாட்டாதென்றுஸ்ரீபாஞ்சாராத்திரபிரமாணம். (௬௧)

பிரபத்திக்கு சாதனமில்லையென்று அருளாளப்பெருமாள்எம்பெருமானுருந்தேசிகரும்அருளிச்செய்தார். (௬௨

ஐந்து அங்கங்களுண்டானபின்பு பிரபத்திபண்ணவேணுமென்றுபிரசனம். (௬௪)

பிரபத்திக்குசாதனமில்லாமையால் அங்கங்களுடன் பிரபத்திபண்ணவேணுமென்ற நிர்ப்பந்தமில்லை என்றுஉத்தரம். (௬௫)

தசவிதவைஷ்ணவலக்ஷணம். (௬௬)

அவைத்தில்பிரபன்னர்-ஏகாந்திகள் இன்னாரென்றது. (௭0)

பரமைகாந்திகள் இன்னாரென்றது. (௭௧)

ஆசாரியனைபரப்பிரம்மமென்றுசுருதி சொன்னது. (௭௪)

எம்பெருமானார்அவதாரத்துக்குபிரமாணம்(௭௭)

அந்தஉடையவர்மணவாளமாமுனிகளாய்அவதரித்ததற்கும்-மணவாளமாமுனிகள் விஷயமானதனியனைபிரபந்தாரம்பத்தில்சொல்வதற்கும் பிரம்மாண்டபுராணவசனம். (௭௯)

அந்த பிரமாணப்பிரகாரம் பூருவாசாரியர்கள் பாசுரங்களில் அருளிச்செய்தது. (௮௧)

தேசிகர்கண்டாவதாரமென்று ஸ்ரீபாஞ்சராத்திரவசனம். (௭௯)

மணவாளமாமுனிகளைத்துவேஷித்தத்தாலேஈசுவரனைத்துவேஷித்தவர்களாவர்களென்று பாரதவசனகிரமங்கள். (௮௨)

சிஷ்யஆசாரியக்கிரமமும்- பகவத்விஷயத்தின் வைபவமுந்தெரிவிக்கும்படி பெரியபெருமாள்மணவாளமாமுனிகளிடத்தில் ஈடுகேட்டது. (௮௪)

மணவாளமாமுனிகள் சேஷாவதாரமாய் சேர்

வைசர்ந்தித்தது. (அரு)

அஷ்டதிக்கெஜங்கள் அவர்திருவடிகளில்ஆஸ்ரயித்தது. (அசா)

மணவாளமாமுனிகள் எம்பெருமானார் திருவடிகளேசரணமென் றிருக்கச்சொல்லி உபதேசித்தது. (அஎ)

திருவாய்மொழி திருமொழிகளில் எக்கியாதிகளைபிராம்மணுள் செய்ததாகசொல்லி யிருப்பது கருமஞ்செய்வதற்குப் பிரமாணமென்றுவடவாரியரியர்கள் நினைப்பது. (அகூ)

கருமாதிகள் புறம்பானனெறிகளென்றும்(நெறிகாட்டி நீக்குதியோ)வென்றும்.ஆழ்வார்கண்டித்தது. (கூல)

ஏகாதசியில்சிரார்தஞ் செய்யக்கூடாதென்று சுருதி. (கூக)

பாபங்களைக்குறித்து வடவாரியர்கள்பிராயச்சித்தம்பண்ணிகொள்வதினுலே ஆத்மாஅபஹாரம்பண்ணபாபம் சித்திக்குமென்றது. (கூக)

பாபங்களைஈசுவரன் போக்குகின்றனென்றுசுருதிகளிலும் கீதையிலும் பிரமாணம். (கூஉ)

பாபங்களைஈசுவரன் போக்குகின்றனென்றுஆழ்வார்கள்வசனம். (ா)

பாபப்பிராயச்சித்தமான வைசுவதேவம் பிரபன்னுள்பண்ணக்கூடாதென்று ஸ்ரீபாஞ்சராத்திரத்தில்லட்சுமிதந்திரத்தில் பிராட்டிவசனம். (கூரு)

பிராட்டிக்குபுருஷகாரமே யுள்ளதென்று ஸ்ரீபாஞ்சராத்திரவசனம். (ாக)

அந்திமகாலத்தில் சாதனபுத்தியாய் ஸ்துதிக்க வேணுமென்றவிஷயத்தில் விவாதம். (௱௬)

வாச்சல்லியகுணத்தைக்குறித்து. (௱௭)

தயாகுணத்தில்பேதம். (௱௮)

பாகவதவைபவம். (௱௯)


அப்படிப்பட்டபாகவதாளுடைய அபிமானத்தாலேமோக்ஷமுண்டென்றது. (௱௰௨)

பாகவதநிந்தனை பண்ணவர்கள் சண்டாளராய் போவர்களென்றுபுராணவசனங்கள். (௱௰௪)

கேசதாரணம். (௱௰௮—௱௨௬)

மணவாளமாமுனிகள் நித்தியசூரிகளுக்குங்க்ஷீராப்தியிலுள்ள வர்களுக்குங் குருவாகையால் இங்கும் அவர்சம்மந்தமுள்ள வர்களுக்கே பரமபதமுண்டென்றது. (௱௨௫)

ஜீயர்திருவடிகளேசரணம்.



ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீமத்தென்னாசாரிய

பி ர பா வ ம்.

ஸ்ரீமத்பரமஹம்சபரிவிராஜகாசாரியஉபயவேதாந்தாசாரியராகிய பின்பழகியபெருமாள் ஜீயர் குருபரம்பராபிரபாவஞ்செய்தருளினார்.

பின்பு ஸ்ரீமது - உபய - பிள்ளைலோகமஸ்வாமிகள் எதீந்திரப்பிரவணப்பிரபாவஞ் செய்தருளினார் - இதில் அவர்கள் அருளிச்செய்த - தென்னாசாரியாளுடையபிரபாவங்களைச்சில சொல்ல வெத்தனப்படுகிறோம்.



டீ [illegible]
ஜியர்திருவடிகளேசரணம்.

குணவாளனிந்திரைகோன் குணங்கூறுமாறன்ருள் - தணவாதவெதிராசன்ருள்வணங்குந்தன்மையனுய் - பணவாதிசேடனருட்பரனேவவவதரித்த-மணவாளமாமுனிவன் மலரடியையடைநெஞ்சே.

இந்தத்தென்ஞசாரியாளுடைய பிரபாவங்களைச்சுருதிகளினும் அவற்றின்விவரங்களான ஸ்ரீபாஞ்சராத்திர - புராணங்களினும் - பகவான்பிருகு அத்திரி - காசியபர் - வசிஷ்டர் - நாரதர் - வியாஸாதிபரமருஷிகளும். [illegible]

என்றுசுருதியிற்சொன்னபடியே-ருஷிகளிற்றலைவனுகிய உருத்திரனும் - ஆழ்வார்களும் - ஆசாரியாளும் - அருளிச்செய்தவைகளைத்தமழிலியாவருமறியும்படிப்பிரசித்தப்படுத்துகிறேம்.

ஸ்ரீவைஷ்ணவர்களில் தென்கலையாரென்றும் வடகலையாரென்றும் இரண்டுவகுப்புண்டிருக்கிருர்கள் - தென்கலையென்பது திருவாய்மொழிமுதலானதிரவிடவேதங்கள் - வடகலையென்பது - நாலு

வேதங்கள் - இந்தஉபயவேதங்களையும் - உபயகலையாரும் - அத்தியயனம் - பண்ணும்படி ஸ்ரீபாஞ்சராத்திரத்தில் - பகவான் - (க) అధీత్య ద్రమిడామ్నాయాం - స్వశాఖాధ్యయనాత్పరం - శ్రమస్తు కృతేన్యత్ర - సోపియాతిపరాంగతిం.

என்று ஸ்ரீவைஷ்ணவர்கள் தங்கள்தங்கள் சாகைகளானவேதங்களை அத்தியயனம்பண்ணினபின்பு திரவிடவேதத்தையும் அத்தியயனம்பண்ணும்படியாயும் அவர்கள் பரமபதத்தை யடைவர்களென்றும் அருளிச்செய்கையால் - உபயகலையாருக்கும் உபயவேதாந்தாசாரியாளென்று பட்டபெயராயிருக்கின்றது - இத்தால் - వేదాధ్యయనాత్ విప్రః- என்றுவேதஅத்தியயனம்பண்ணல் விப்பிரத்துவமும் தென்கலையை அத்தியயனம்பண்ணல் வைஷ்ணவத்துவமுஞ்சித்திக்கும் - இதற்குப்பிரமாணம் (திருவாய்மொழியில்) ஆழ்வார் - அறிவரியபிரானையாழியங்கையனையேயலற்றி - நறியநன்மலர்நாடி நன்குருகூர்ச்சடகோபன்சொன்ன - குறிகொளாயிரத்துள்ளிவைபத்துந் திருக்குறுங்குடியதன்மேல் - அறியக்கற்றுவல்லார்வைட்ணவராழ்கடன்ஞாலத்துள்ளே - என்றுதிருவாய்மொழியைக்கற்று அதன்பொருளையறிந்து - அந்தநிலையில்நின்று - அதில்விசுவாஸமுள்ளவர்கள் வைஷ்ணவர்கள் என்றருளிச்செய்கையால்தென்கலையாருக்கே - வைஷ்ணவத்துவசித்தி-ராவணன் வேதங்களைச் சிக்கறுத்துப் பத-க்கிரம-ஜடைமுதலிய அலங்காரங்களையேற்படு

த்தினதாகவும் - అగ్నిహోత్రాశ్చ వేదాశ్చ - రా
క్షసానాం గృహే గృహే - என்றிராக்ஷசாளுடைய
கிரஹங்களில்வேதங்களும் வைதிககருமங்களுநட
ந்ததுகளாகவும்சொன்னபோதிலும்வடகலையாகிய
வேதத்தைமாத்திரம் படித்தவர்களுக்கு வைஷ்ண
வத்துவஞ்சொல்லவில்லை - வடகலையை அத்திய
னம்பண்ண மாத்திரத்தில் வைஷ்ணவத்துவ முண்
டென்றுசொல்லும்பக்ஷத்தில் அசுராளுக்கும் - இ
தரமதஸ்தருக்கும் - வைஷ்ணவத்துவமுண்டாகலா
ம்-அவர்களுடைய-ஸ்ரீபாததீர்த்தமும்-உத்தேசமா
கலாம் - இத்தைக்குறித்து-இன்னமனேகமாய்அடி
யில்விவரிக்கிறதிலேயின்னமநேகம்விவரமாகும்.
(உ) ஸ்ரீபாஞ்சராத்திரத்தில் ஈசுவரசம்மிதையில்-
యస్తు ద్రమిడవేదార్థ- వేత్తా తస్యపదద్వయం-
సంశ్రిత్య ఉభయ పాదాంబు - పేయం మోక్షఫలార్థి
భిః - என்று தென்கலையை யப்பியசித்து அதன்
பொருளையறிந்தவர்களுடைய இரண்டு திருவடிக
ளிலும் ஸ்ரீபாததீர்த்தஞ்சேர்த்து மோக்ஷத்திலிச்
சையுடையவர்கள் ஸ்வீகரிக்கவேணுமென்று சொ
ல்லுகையால் தென்கலையாருடைய ஸ்ரீபாத தீர்த்
தமேமோக்ஷத்திலிச்சையுடையவர்களுக்குச்சீவன
மாயிருக்கின்றதென்றுபகவான் அருளிச்செய்ததா
விளங்குகின்றது-இன்னமும் ஒருதிருவடியில் ஸ்ரீ
பாததீர்த்தஞ்சேர்க்கிறவர்கள் இந்த ஸ்ரீபாஞ்சரா
த்திரத்திற்குப் புறம்பானவர்களென்று மறியலாம்-

இன்னமும் இவ்வர்த்தத்தைஆழ்வார்(தீர்த்தங்களா யிரத்துள்ளிவைபத்தும் வல்லார்களைத் தேவர்வை கல். தீர்த்தங்களேயென்றுபூசித்துநல்கியுரைப்பர் தந்தேவியர்க்கே (என்றும்) பதியினிற் பாங்கினிற் பாதங்கள்கழுவினர் என்றும் பரிசுத்தமான ஆயி ரத்தையப்பியசித்து அனுஷ்டிக்கவல்ல தென்க லையாரை நித்தியசூரியகளதங்கள் திருமாளிகைக ளில்பாங்கினில் இவர்களை யெழுந்தருளப்பண்ணி ஸ்ரீபர்தங்கள் கழுவினராயருளிச்செய்தார். (௩) பி ன்னும்ஸ்ரீபாஞ்சராத்திரத்தில்ஈசுவரசம்ஹிதையில்- యస్తుద్రమిడవేదార్థ - జ్ఞాతా సపురుషఋషభః - దానపాత్రంచ సంపూజ్యో - విశేషాశ్చముముక్షు భిః - என்றியாதொருத்தர்தென்கலையின்பொருளை யறிந்தார்களோ அவர்கள்புருஷரிளில்சிரேஷ்டா ள்தானத்துக்குப்பாத்திராள் - விசேஷிக்கியாள் அ வர்களேமுமுட்சுக்கள் என்றும் - (௪) அநிருத்தச ம்ஹிதையில் - స్వశాఖా ద్రమిడామ్నాయా - వి చ్ఛేద్యే తైత్రిపూరుషం - యస్యతస్మిన్నవాచ్యంస్యా త్ - దౌర్బ్రాహ్మణ్యమతిశ్రుతిః.

தங்கள்சாகைகளுந்திருவாய் மொழியும் மூன்றுத லைமுறைஅத்தியயனம் பண்ணுமல் எவர்களால் வி டப்பட்டதுகளோ அவர்களிடத்தில்சொல்லத்தகா ததுர்ப்ராமணத்துவமுமாகும் என்று கேழ்விப்ப டப்படும்என்றும்.(௫)యస్తుద్రమిడవేదార్థ - జ్ఞా తారంప్రణమేన్నరం - సబహూన్యపివర్షాణి - బ్ర

హ్మలోకే మహీయతే - எவனானால்திரவிடவேதார்த்தத்தையறிந்தபுருஷனைச் சேவிக்கிறானோ அவன் அநேகங்களானவருஷங்கள் பிரம்மாவின் லோகத்திலேபூசிக்கப்படுவன்என்றும். (௬) యస్తు ద్రమిడ వేదార్థ - జ్ఞాత్రే సమ్యక్ప్రయచ్ఛతి - అభ్యంజనాదిభుక్త్యంతం - సయాతి పరమంపదం - எவன்திரவிடவேதார்த்தத்தையறிந்தவன்பொருட்டு அப்பியஞ்சனாதியாய்ப்போஜனம்வரைக்கும்நன்றாக ஆராதிக்கிறானோ அவன்பரமபதத்தையடைகிறானென்றும். (௭) ద్రమిడోపనిషద్జ్ఞాత్రే - విశ్వాసాద్యః ప్రయచ్ఛతి - గోపాదమాత్రాంవసుధాం - స స్వారాజ్యమవాప్నుయాత్ - எவன்திரவிடோபநிஷத்தையறிந்தவன்பொருட்டு விசுவாஸத்தாலே கோபாதமாத்திரமானபூமியைக் கொடுக்கிறானோ அவன் ஸ்வர்க்கத்தையடைகிறானென்றும். (௮) பாரமேசுவரசம்மிதையில்- బ్రాహ్మణక్షత్రియో వైశ్య-శూద్రో వాన్యోథసంకరః - అధీత ద్రమిడామ్నాయాః- పూజ్యో వాథముముక్షుభిః - பிராமணன்- க்ஷத்திரியன் - வைசியன் - சூத்திரன் - பின்புமற்றசங்கரவர்ணமானவர்களுந் திருவாய்மொழியை அப்பியசித்தவர்கள் - முமுட்சுக்களாலேபின்பு பூசிக்கத்தக்கவர்கள்என்றும். (௯) ஸ்ரீபாஞ்சராத்திரத்திஸ்பி

ரம்மசம்மிதையில் - ద్రావిడామ్నాయ వేదాంత-
ఘోషో యత్రాస్తి సర్వదా - తస్మిన్ ముముక్షుభి
గ్రామే స్థాతవ్యమితరత్ర న - திரவிட வேதங்க
ளாகிற வேதாந்தங்களினுடையதொனி எவ்விடத்
தில்சார்வகாலமுமுண்டாயிருக்கிறதோ அந்தக் கி
ராமமமுமுக்ஷுக்களாலே வசித்திருக்கத்தக்கது-
அந்நியஸ்தலம் வசிக்கத்தக்கதன்று என்றும்.
(௬) యో ద్రావిడశ్రుతిం వేత్తి - వైష్ణవస్తస్య సంత
తిః - శివాదమలభం స్థానం - విష్ణోర్యాత్యతిసనా
తనం- என்றுதிருவாய்மொழியையார்அப்பியசிக்கி
ருர்களோ அவர்களுமவர்களுடைய ஸந்ததிபரா
ளும் வைஷ்ணவாள் அவர்கள் சுருதியில் - యన్న
దేవాః న మునయః - సచాహన్న చ శంకరః - జానం
తి పరమేశస్య - తద్విష్ణోః పరమం పదం - என்றுதேவர்
களாலும் முனீசுவரர்களாலும்சதுமுகனுகிய வெ
ன்னுலும் சங்கரனுலும் - அறியவொண்ணுத விஷ்
ணுவின்பரமபதமென்று சொல்லும்படியேசீவா
திகளுக்கு-லபிக்கவரிதான விஷ்ணுவின் திருவடிக
ளை யடைகிருர்கள் என்றுஞ் சொல்லியிருக்கின்ற
படியால் - தென்கலையார்பெருமை சொல்லால்
கூறும் பரமன்று - இத்தால் பிரமன் சுருதியில்
தன்னுலுஞ் சங்கரனுலும் அறிய ஒண்ணுதபரமபத
மென்று - சொல்லியிருக்கையால் சைவர்கள் அரு

ஞ்சலத்தில் விஷ்ணுசிவனுடையபாதத்தைத்தேடி ஞரென்றும் (மாலுமயனுங்காணுமலரடி) என்றுந்தி ருவாசக முதலிய நூல்களில்பாடியிருப்பது வேத பாஹியம்.

(௰௧) பவிஷியத்புராணத்தில் - ద్రమిడామ్నాయ నిరతం - యోనిందతి సదుర్మతిః - బ్రహ్మప్రళయ పర్యంతం - కుంభీపాకే సపచ్యతే - என்று திரவிட வேதத்தையார்நிந்திக்கிறூர்களோ அவர்கள் துர்ம திகள் பிரம்மப்பிரளயம்வரைக்குங்கும்பிபாகமெ ன்கிற நரகத்திலே அவர்கள் பசிக்கப் படுவார்க ள் அதாவது சுடப்படுவர்கள் - என்று லோகசிரு ஷ்ட்டிக்குமுன்னமெயுண்டான ஸ்ரீபாஞ்சராத்திர த்திலும் புராணத்திலும் பிரம்மாவுக்கு அருளிச் செய்கையால் தென்கலைதூதனமென்றவர்கள் இந் தவைஷ்ணவாகமத்துக்குப் புறம்பானவர்கள் எ னறறியலாம் - இவ்வார்தத்தை மணவாளமாமுனி கள் - ஆழ்வார்களையும் அருளிச்செயல்களையுந் தா ழ்வாநினைப்பவர்தாம்நரகில்-வீழ்வார்கள்- என்றுநி னைத்துநெஞ்சேயெப்பொழுதுநியவர்பால் - செ ன்றணுகக்கூசித்திரிஎன்று அருளிச்செய்தார் - அ ரசாணிவேங்கடாசாரியார்செய்தவிசுவகுணதரிசன மென்றகிரந்தத்தில் வேதமிருக்கத் தென்கலையார் திருவாய்மொழியைப்பியசித்து மோக்ஷமடைய நினைப்பது திருப்பாற்கடலின் அருகிருந்து கா சுக்குப்பால்வாங்கித் தாஹந்தீர்ப்பதோ டொக்கு

மௌனச்சொல்லியிருப்பதுபோலச்சொல்லும்படி யானசிலருமுண்டு (தென்கலை நூதனமென்றும் வடகலை அநாதியென்றும் இகழ்ச்சியாய்நினைத்திருப்பாருமுண்டு அவர்களை - சுருதியில் రాధాం என்றும் அவ்வர்த்தத்தைப் பிரம்மாண்ட புராணத்தில் అష్టాత్రింశచ్ఛాఖ్యాంచ - రాధాంది వాక్యం కరిష్యతి- என்றும் முன்சொன்ன ஸ்ரீபாஞ்சராத்திரத்தில்திரவிடவேதமென்றுபலவிடங்களிலுஞ்சொன்ன பிரமாணங்களையுமறியாதவர்களென்றுயார்தானினைக்கமாட்டார்கள் - கண்ணன் துவாபரயுகத்திலுஞ்- சக்கிரவர்த்திதிருமகன் திரேதாயுகத்திலுமவதரித்ததைச் சுருதிகளில் - బ్రహ్మణ్యో దేవకీపుత్రో బ్రహ్మణ్యో మధుసూదనః - என்று தேவகிபுத்திரன்பரப்பிரம்மமென்றுஞ் சீதாவல்லபனையுமப்படியேசொல்லியிருக்கின்றதுபோலத்திருவாய்மொழியைச்சுருதி ஸ்ரீபாஞ்சராத்திரங்களிலும் புராணங்களிலும் அநாதியென்று சொல்லுகையால்வடமொழியென்றதுதென்மொழியை நினைத்தேயென்று ஆசாரியஹிருதயத்தில் அழகியமணவாளனைநார்சாரியர் அருளிச்செய்தார் - ஸ்ரீகீதையை நூதனமென்றுசொல்லும்படியிருந்தால் இதற்குஞ்சொல்லலாம்-அப்படிச்சொல்லுமவர்கள்போகிறலோகத்தையே முன்பிரமாணங்கள்சொன்னதும். உய்வுபாயமற்றின்மைதேறிக் கண்ணன்கழல்கள்மேல்— செய்யதாமரைப்பழனத்தென்னன்குருகூர்ச் சட

கோபன். பொய்யில் பாடலாயிரத்துளிவையும் பத்தும்வல்லார்கள், வையமன்னிவீற்றிருந்துவிண்ணுமாளுவர்மண்ணூடே) என்கிறபடியே இப்போதுதாமருளிச்செய்வதில் பொய்யில்லாதபாடலான ஆயிரத்திலிந்தப் பத்துப்பாசுரத்தையும் கற்று அதன்பொருளையறிந்துஈசுவரனுடையஅருளையொழியவேறேஉச்சீவனத்துக்குபாயமில்லை யென்றுதேறியிருக்குமவர்கள்பூமியின்கண்ணிலெ எம்பெருமானரைப்போலெ நூற்றிருபதுசம்வச்சரமிருந்து இங்கிருந்தேசிறுமுறிச்சீட்டுச்செல்லும்படிபரமபதத்தையும் ஆளுவர்களென்றும் மீட்சியின்றி வைகுந்தமாநகர் மற்றதுகையதுவே என்கிறபடியே ஸ்வர்க்காதிபிரம்மலோகங்களைப்போலே மீளுதலில்லாதபரமபதம் அஸ்தகதமா யிருக்குமென்றும் அருளிச்செய்தார். இப்படித்திருவாய்மொழி திருமொழி முதலானதுகளிலுந் தென்கலையாருடையவைபவங்களை ஆழ்வார்க ளருளிச்செய்திருக்கிறவிடங்களில்கண்டுகொள்க.

எல்லா ஆசாரங்களுக்கும் பிரதானமாயிருப்பது திருமண்தரிக்கை-உபயகலையாரில்வடமாசாரியர்களென்று பேர்வழங்கிவருகிறவர்கள் விஷ்ணுவின் பாதத்தில் கங்கைபிறந்தபடியால் வலதுதிருவடிகளே சிரேஷ்டமென்று ஒருதிருவடியாகி ருதியாய்த்திருமண்தரிக்கிறார்கள் - அவர்களில் அகோபிலஞ்ஜீயர்மடத்தார் மடத்துத்திருமண்காப்பென்று அடிப்பாதங்கண்டு நெற்றியில்தரிக்கிறார்கள்-மாத்

துவர்களில் சிலர் நாஸாதிஎன்பது அடிமூக்குமுத லென்று தரிக்கிறார்கள் அவர்களிற்சிலர்இரண்டு துவாரங்களுங் கூடுகிற மூன்றும்பாகமுதல்நாசிகை யென்றுதரிக்கிறார்கள் - தென்கலையாரென்று பேர் வழங்கிவருகிறவர்கள் - విష్ణు పాదోద్భవాంగంగాం- என்று விஷ்ணுவின் திருவடிகளில் கங்கைபிறந்தப டியால் கங்கைக்குமஹாத்மமேயொழியக் கங்கை பிறந்தபடியால் திருவடிகளுக்குமஹாத்மஞ்சொ ல்லக் கூடாதென்று இரண்டு திருவடிகளைப்போ லும் நடுவில்பிராட்டியும் அடியில்பாதுமபீடமான ராமாநுஜனுடனே தரிக்கிறார்கள்- இவர்களிப்படித் தரிப்பதற்குச்சுருதிப்பிரமாணம்- (௰௨)காத்தியா யனவுபநிஷத்தில்- నాసాది కేశపర్యంతమూర్ధ్వ పుండ్రం - విష్ణోస్థితస్య చరణద్వయాకృతిః - ఏకాంగుళం పాదతలోరస్య మూలం-తదుత్పన్నే ద్వే ఛాఖే - తద్వైవముభ్యావకాశోంగులాదన్యూన -స్వశ్రీఃప్రతిష్ఠాన్మై శ్రీ వాఙ్గహరిద్రా - என்று நாஸா திகேசம்வரைக்கும் ஊர்த்துவபுண்டரந்தரிக்கவே ணும்-அப்படித்தரிக்குமிடத்தில் விஷ்ணுவினுடை யவிரண்டுதிருவடிகளைப்போலும் அந்தஅரியின்தி ருவடிகளாகிறதருக்களுக்குஒருஅங்குலம்வேர்போ லப்பத்மபீடமான ராமாநுஜனுந் தரிக்கவேணும். அந்தவேரின்உற்பத்தியில் இரண்டு கிளைகிளர்ந்தா ற்போல இரண்டு திருவடிகளைக்கற்பிக்கவேணும் -

இரண்டுதிருவடிகளுடைய நடுவில் ஒரு அங்குலத்தைக்காட்டிலுங்குறையாமலிருக்கிறவெளியை நிருமிக்கவேணும்அந்தவெளியில்மஞ்சள்சூரணத்தினலே பிராட்டியைப் பிரதிஷ்டைபண்ணவேணுமென்றுசொல்லியிருக்கிறபிரகாரந் தென்னுசாரியர்கள்தரிக்கிருர்கள்- (௰௩) விஷ்ணுவின்திருவடிகளையும்பிராட்டியையுந் தரிக்குமிடத்தில்பத்மபீடங்கற்பிக்கவேண்டியதென்னவெனில் - சாந்தோக்கியவுபநிஷத்தில் సవితృమండలమధ్యవర్తీ నారాయణస్సరసిజాసనసన్నివిష్టః - என்று சூரியமண்டலத்தில் வர்த்திக்குமவன் ஸ்ரீமந்நாராயணனென்றும் ஸரஸிஜமான தாமரைக்கமலத்தை ஆஸனமாகவுடைத்தாயிருக்கின்றனென்றும் - (௰௪) மற்றெருசுருதியில் - విష్ణోః పదే పరమే మధ్వ ఉత్సః - என்று ஸ்ரீவிஷ்ணுவின்திருவடிகளிலிருக்கிற தாமரைக்கமலத்தில் தேன்பிரவஹிக்கின்றதென்றும் - ஸ்த்ரீசூக்தத்தில்- పద్మే స్థితాం - என்றுபிராட்டிதாமரைக்கமலத்திலிருப்பவளென்றுஞ்சொல்லியிருப்பதினலே புராணத்தில் - పద్మాసనే చ విన్యస్తం హరేః పాదాక్షయం తథా - తథైవ శ్రియం తాం స దేవః - లలాటే కమలోద్ధారే - என்றுபிராட்டியையுந் திருவடிகளையும் பிரதிஷ்டைபண்ணும்போது பத்

மபீடத்தின்பேரில் வைக்கப்பட்டிருக்கின்ற அரி பாதாகிருதியைப்போல ஸர்வரும் நெற்றியில் மநோஹரமாய்த் தரிக்கவேணுமென்று சொல்லியிருக்கின்றது-(௰௫) இந்தகாத்தியாயனவுபநிஷத்தில்சொன்னவர்த்தத்தை வாசிஷ்டசம்ஹிதையில்வசிஷ்டரும் - ఏకాంగులం నాసికాదౌ - ధృత్వాసచ్ఛిద్రమృత్తికాం - భ్రువోరంతస్థాదారభ్య - రేఖాద్వయసమన్వితం - కేశాంతం విన్యసేత్ పుండ్రం - ఊర్ధ్వం నిత్యం ద్విజోత్తమః-என்று நாசிகையினுடைய ஆதியில்ஒரு அங்குலபீடமும்இடையில்வெளியும் விட்டுப்புருவங்களின் கீழிருந்துஇரண்டுரேகைகள் சமமாகப்பிராம்மணாள் நித்தியந் தரிக்கவேணுமென்றும்அருளிச்செய்தார்.(௰௬)முன்சொன்னசுருதியில்நாஸாதிகேசம்வரைக்கும் ஊர்த்துவபுண்டரந் தரிக்கும்படிச்சொன்னது எதுமுதல்நாசிகையென்றால் ஸ்ரீபாஞ்சராத்திரத்தில்பாத்மசம்ஹிதையில் నాసికాయాస్త్రయో భాగాః - నాసామూలం ప్రచక్షతే - తదారభ్య లిఖేత్పుండ్రం - మధ్యభక్త్యా భవంతి చేత్ -என்று மூக்கின் மூன்றிலொருபாகம் நாஸிகையென்றும்-மேல்பாகமான நாசிகைமுதல் கேசம்வரைக்குந்தரிக்கவேணுமென்றும்- భాగస్త్రితయోర్ధ్వ నాసాయాః - నాసామూలం ప్రచక్షతే - నాసికామూ

లమారభ్య - లలాటాంతం ప్రకల్పయేత్ - என்று
இதற்குமுன்சொன்னதே அர்த்தம். (௰௭) பின்
னும் ஸ்ரீபாஞ்சராத்திரத்தில் - నాసికాయాస్త్ర
యోభాగో - నాసామూలం ప్రచక్షతే - తదాదావూ
ర్ధ్వపుండ్రాణి-ఛిద్రం కేశాంతమాచరేత్ - ఏవం
సర్వాణిపుండ్రాణి - సచ్ఛిద్రాణ్యేవ ధారయేత్ -
என்றிதற்கும் மூக்கில் மூன்றிலொருபாகம் நாசி
கையென்றும் அதுமுதல்கேசம்வரைக்கும் இடை
வெளிவிட்டுத்தரிக்கவேணுமென்றுஞ் சொல்லியி
ருக்கின்றது. (௰௮) முன்சொன்ன வுபநிஷத்தி
ன் அர்த்தத்தைச் சாண்டில்யஸ்மிருதியில் - ఆయ
తమేకాంగుళంపాదం - తదూర్ధ్వస్య మూలం - తదుత్ప
న్నే ద్వే శాఖే - என்றுவிஷ்ணுவின் திருவடிகளா
கிறதருக்களுக்கு ஒரு அங்குலம் வேர்போலிருக்க
வேணுமென்றும் அந்தவேரின் உற்பத்தியில் இர
ண்டு கிளைகிளர்ந்தாப்போலிருக்கவேணுமென்று
ஞ் சொல்லியிருக்கின்றது - (௰௯) மூலமென்
று முன்சொன்னஉபநிஷத்தின் அர்த்தத்தைப் பி
றஹந்நாரதீயத்தில் அத்திரிமஹாரிஷிவசனம்—
సమూలపుండ్రసహితాః - తప్తచక్రాదిచిహ్నితాః - స
దాపావనదేహాస్తే - తేషాం దత్తమనంతకం - என்று
வேதத்தில்சொன்னபடியே மூலபுண்டரமுடைய
வர்களாய் - தப்தமானசங்கசக்கராங்கிதமுடையவ

ர்களாய் அத்தாலேசார்வகாலமும். பாவநமானதேஹத்தையுடையவர்களாயிருக்குமவர்களுக்குத் திரணஞ்சமர்ப்பித்தால் அநந்தபலமுண்டென்றுஞ் சொல்லி யிருக்கின்றது - இந்த வுபநிஷத்தை அநுசரித்துமுன்சொன்னவர்களைப்போலேவேதாந்ததேசிகருந் தாமருளிச்செய்த ஸசரித்திரரக்ஷை என்றகிரந்தத்திலும் மணவாளமாமுனிகள் செய்தருளிய சைவவைஷ்ணவமென்ற கிரந்தத்திலும் ஸ்ரீ-உ-கண்டகோத்தாரணமன்னப்பையங்கார்செய்தருளியஊர்த்துவபுண்டரவிஜயமென்றகிரந்தத்திலும்)- தத்துவஸாரவியாக்கியாதாவாய்ச்சதுசாஸ்தரபாரங்கதரான ஸ்ரீமத் - உபய - திருமழிசை அண்ணாவப் பையங்கார்செய்தருளிய (ஆன்னீகம் என்றகிரந்தத்திலும் - (பழநடைவிளக்கம்) - முப்பத்திரண்டு பிரசிரோத்திரத்திலும் - உதஹரித்திருக்கிறார்கள்.

(௨௰) பாதமெனறுமுன்சொன்ன உபநிஷத்தில்சொன்ன அர்த்தத்தைப் பிரஹந்நாரதீயத்தில் -

సపాదపద్మాధ్వ ఊర్ధ్వపుండ్రాంతు - ద్వాదశస్థానేషువిన్యసేత్ - పద్మాక్షతులసీ దామ - ధారయిత్వాగ్రీసదా-

என்றுபன்னிரண்டுஇடங்களிலும்பாதத்தோடுகூடின ஊர்த்துவபுண்டரந் தரித்துப் பத்மாக்ஷதுளசிமாலைகளைத்தேகத்தில் சார்வதாதரிக்கவேணுமென்றும்-సమేవవల్లభో విష్ణు- స్తస్య లక్ష్మీప్రసీదతి-సయేవవైష్ణవశ్రేష్ఠః-సంకీర్తనవరస్సః. என்றுஅவ

ர்கள் விஷ்ணுவல்லபாளாய்ப் பிரியாயவிருப்பர்களென்றும் அவர்கள் வைஷ்ணவர்களில்சிரேஷ்டர்களென்றும் பங்திபாவனர்களென்றுஞ்சொல்லியிருக்கின்றது - (௨௧) காசியபர்வசனம் - ఔంచక్రో మేస పీఠంతు - ద్వషడ్ పుండ్రంసదా శుభం - ధృత్వా చతులసీదామ - సదామ త్వాణవల్లభః - స్వావణ్ణందభ౯ జన్యంచ - పవిత్రముభయంపరం-ధృత్వా చాష్టాక్షరం జప్త్వా - కులకోటింసముద్ధరేత్ என்று பத்மபீடமுடைய பனிரண்டு புண்டரத்துடனே என்னையர்ச்சித்தவர்கள் கோடிகுலத்தையுத்தாரணம்பண்ணினவர்களாவர்கள் என்றருளிச்செய்தார் - (௨௨) நாரதர்வசனம் - కాలోపిభిభ్యతిపరం - దృష్ట్వా వైగభ౯వైష్ణవం - సపీఠపుండ్రంశ్రేష్ఠం - తులసీ మణి భూషణం-అష్టాక్షరపరంశాంతం-సదాచైవపవిత్రిణం-నామసంకీత౯నపరం ప్రణామంకురుతేకదా என்றுபீடமுடைய புண்டரம்சிரேஷ்டமென்றும் மற்றெல்லாம் முன்போலவே யருளிச்செய்தார் - (௨௩) பிருகுவசனம்— సపాదపుండ్రాణికరోతిభక్త్యాః - యఃపూజయేత్తార్ష్య౯పతాకధారిణం - తద్వంశభూతోహరి రేవసంతతిం - తత్తార్య్యసిద్ధింవిదధాతి నాన్యథా.

பாதமுடைய புண்டரத்தை பக்தியிருலேதரித்து கருடத்வஜனையாராதிக்கிறவர்களுடைய வம்சத்தில் ஸ்ரீஹரி அவதரித்துஅவர்காரியங்களைச்சித்திக்கும் படி பண்ணுகிருன்வேறில்லை என்றும்.

(௨௪) பிரஹ்லாத்சேனசம்மிதையில் திலீபநாரத சம்வாதத்தில் - சந்திரகாந்தோபாக்கியானத்தில் நாரதர்வசனம் - శృణుష్వ నృపతిశ్రేష్ఠ - త్వమేవ సుకృతీభువి - వక్ష్యామిసరహస్యంతు - శ్రవణాత్ కులపావనం - యేతప్తశంఖచక్రాంగాః. విష్ణుపాదైకసంశ్రయాః - సదావిష్ణుకథోత్సాహాః - విష్ణుధర్మపరాయణాః-సపీఠపుండ్రసహితాః - లక్ష్మీచిహ్నసమన్వితాః - ద్వాదశాక్షరతత్వజ్ఞాః - సదాష్టాక్షరసేవకాః - ప్రపత్తిద్వయసంయుక్తాః - తదర్థేత్యక్తజీవితాః - ద్వాదశోర్ధ్వస్థలేపాద-పుండ్రగాస్సర్వదైవహి - తేముక్తియోగ్యాస్తులసీ - మణిమాలాక్షధారిణః - తద్గోష్ఠీనిరతాయేతు - తద్భక్తాఃపంక్తిపావనాః- గృహభాండపదార్థాంశ్చ - శంఖచక్రాదిచిహ్నితాన్ - సపాదపుండ్రసహితాన్- యేకుర్వంతి విచక్షణాః - పరమైకాంతినస్తేహి- నారాయణసమానుతాః - என்று யாதொருத்தர் தப்த சங்கசக்கிராங்கனமுடையவராய் விஷ்ணுவின் திருவடிகளில் ஆசிரயித்தவர்களாய் - சார்வகாலமும் விஷ்ணுவி

ன்கதைகளைக்கேட்டு உச்சாஹத்தை யுடையராய் ஶ்ரீபாதத்தோடுங்கூடின புண்டரமாகிய திருமண்காப்பையும் லக்ஷ்மி சின்னமான ஸ்ரீசூரணத்தையுமணிந்து - துவாதசாக்ஷரங்களுடைய வுண்மையையறிந்து - சார்வகாலமும் அஷ்டாக்ஷரப்பொருளையறிந்து சேஷத்துவவிர்த்திகளைச்செய்துகொண்டிருக்கப்பட்டவர்களாய் - பிரபத்திநிஷ்டையைச்சொல்லுகின்ற துவயமென்ற மந்திரத்தை அநுசந்தித்துக்கொண்டு அதுவேஜீவனமாக விருக்கப்பட்டவர்களாய் பன்னிரண்டு இடங்களிலும் பாதபுண்டரத்தை யுடையவர்களாயிருக்கப்பட்டவர்கள் முக்திக்கு யோக்கியாள் - அவர்களுடைய கிரஹங்களுக்கும் பாண்டங்களுக்கும் ஆசனம்வாஹநங்கள் தவிரமற்றுமுள்ளபதார்த்தங்களுக்கும் சங்கசக்கிரங்களும்பாதத்தோடுகூடினபுண்டரத்தையும்வைத்திருக்குமவர்கள் வித்வான்களாய் பரமேகாந்திகளாய்நாராயணனுக்கு அத்தியந்தம் பிரியராயிருப்பார்களென்றும் நெற்றிமுதலியபன்னிரண்டு இடங்களிலும்கிரஹபாண்டபதார்த்தங்களுக்கும்பாதபுண்டரந்தரிக்கும்படி விதியுண்டாயிருக்கின்றது.

(உரு) காரணசம்ஹிதையில் - பிரம்மாவுக்கும்பகவானுக்கும் நடந்தவசனம் - నాసాగ్రపాదసంయు క్తపుండ్రయుక్తాస్సదైవహి - నతేషాం స్పర్శదోషస్స్యాత్ - తేషాం ధర్మాస్తథోనహి - సదాతేమోగ్య వర్యాశ్చ - మమభక్తాస్త ఏవహి - என்றுநாசிகையி

ல் பாதத்தோடுகூடின திருமண்ணைவைத்தவர்களைப் பாபம் அணுகாது - அவர்களுடைய தர்மத்துக்குச்சமானமில்லையென்றுபகவான் அருளிச்செய்தார் - (௨௬) ஸ்ரீகூர்மமஹாத்மியத்தில் - ஸப்ததசாத்தியாயத்தில் சங்கரனுக்கும் பகவானுக்கும் நடந்தவசனத்தில் - సపాదపుణ్డ్రాంకితఫాలదేశాః - సుతప్తచక్రాంకితబాహుమూలాః-అష్టాక్షరద్వాదశమంత్రజప్యాః - మద్భక్తవర్యాఃఖలుపూతదేహాః - என்றுபாதபுண்டரத்தினாலே அங்கிதமான நெற்றியையுடையவர்களாயும் நன்றாகத்தப்தமான சங்கசக்கிரங்களினாலே அங்கிதமானதோள்களையுடையவர்களாயும் அஷ்டாக்ஷரத்துவாத சமந்திரங்களை ஜபிக்கப்பட்டவர்கள் என்னுடைய பக்தாளில் சிரேஷ்டாள் - பின்னும்பரிசுத்தமானதேகத்தையுடையவர்களன்றோவென்றருளிச்செய்தார்.

(௨௭) ஸ்ரீபாஞ்சராத்திரத்தில்- నాసాదౌద్వ్యంగులాహం - మధ్యేతుద్వ్యంగులంభవేత్ - పార్శ్వేమంగులమాత్రంతు - సుస్పష్టంధారయేద్ద్విజః - என்றுநாசியில் இரண்டங்குலப்பாதமும் - நடுவிலிரண்டங்குலம்வெளியும் பக்கங்களில் - ஒவ்வொரு அங்குலந் திருவடிகளும் இடவேணுமென்று பகவான் அருளிச்செய்தார்.

(௨௮)பராசர ஸ்மிருதியில் - నాసాదౌద్వ్యంగు

లంపీఠం - తత్పార్శ్వేచోర్ధ్వపుణ్డ్రకం-ద్వ్యం

గుళంత్ర్యంగుళంవాపి సాంతరాళంప్రకల్పయేత్ -

పంచసంస్కారయుక్తానాం - వైష్ణవానాంవిశేషతః -

గ్రహార్చనావిధానేతు - శంఖఘంటారవంత్య

జేత్ - என்றுநாசிகையின் ஆதியில் இரண்டங்குலம் பாதமும் பக்கங்களில் ஊர்த்துவபுண்டரமும் நடுவில்இரண்டு அல்லதுமூன்றங்குலம்வெளியும்விட்டெழுதவேணுமென்றுசொல்லி - பின்னுங்கிரஹ அர்ச்சனைகளில்சங்கநாதமும் மணியோசையுந் தியஜிக்கவேணுமென்றும்அருளிச்செய்தார்-இதனால் பாதமில்லாதபுண்டரமும்கிரஹாராதனத்தில்மணியோசையும் அவைதீகமென்று பராசர பகவான் அருளிச்செய்தார். (உகூ) ஹாரீதஸ்மிருதியில்-

పాదస్తుద్వ్యంగులాయామః - సార్ధైకాంగులవిస్తృతః - என்று நாசிகையில் தரிக்கப்பட்டபாதமானது நிகளத்தில் இரண்டங்குலமும் அகலத்தில் ஒன்றரையங்குலமுமானபதுமபீடந் தரிக்கவேணுமென்றுஞ்சொல்லியிருக்கின்றது.

(௩௰) பராசரசம்ஹிதையில் விசிஷ்டபரமதகதனத்தில் - அதாவது பரமமானதர்மங்கள்முழுமையுஞ்சொல்லுகிறவிடத்தில் - నాసాదౌద్వ్యంగులంపాదం - మధ్యంసార్ధాంగులంభవేత్ - పార్శ్వేఏకాంగులమాత్రంతు - సుస్పష్టంధారయేద్ద్విజః - என்று

நாஸாதியில் இரண்டங்குலம்பாதமும் - இடைவெளியில் ஒன்றரை அங்குலமும்பக்கங்களில் ஒவ்வொரு அங்குல அகலமும் பிரகாசமாய் பிராமணாள் தரிக்கவேணுமென்று அருளிச்செய்தார்.

(௩௧) ஸ்ரீபாஞ்சராத்திரத்தில் - నాసాదౌ ద్వ్యంగులం పాదం - మధ్యే సార్ధాంగులం భవేత్ - పార్శ్వమంగుల మాత్రంతు - సుస్పష్టం ధారయేద్ద్విజః - విష్ణ్వపీఠం రక్తవర్ణం - హరిద్రా చూర్ణముత్తమం - లక్ష్మీనివాససిద్ధ్యర్థం - దండాకారంతుసూక్ష్మకం - என்றிதற்கும்முன்சொன்னதே அர்த்தம்-

பாதபுண்டரம்வைத்தவர்கள்மஹாத்மியமாத்திரமல்லவேமஹாரிஷிகள்சொன்னது-சக்கிராங்கனந்துளசிமணிமுதலானசின்னங்களுடையவர்கள் பெருமையுஞ்சொல்லுகையால்அந்தப்பெருமைஎங்களுக்குமுண்டென்று ஸ்ரீடமில்லாப்புண்டரந் தரிப்பவர்கள்சொல்லில் - திருமங்கலியமில்லாதபூஷணம் அவத்தியத்தைவிளைக்குமாப்போலேபாதபுண்டரமில்லாத-திருமண்அவத்தியத்தைவிளைக்குமென்று பிரமாணங்களில்சொல்லியிருப்பதைத்தெரிவிக்கிறோம் - ஸ்ரீபாஞ்சராத்திரத்தில் - సంకీర్ణం పాదహీనంచ - శ్రియాశ్లిష్టన్నిరాకృతి - యేకుర్వంతి దురాత్మానః - తేయాంతినరకార్ణవం - என்றுதிருமண்ணும் ஸ்ரீசூரணமுங்கலக்கும்படியாயும் - பா

நமில்லாமலும் ஸ்ரீ சூரணங்கலக்கும்படி நடுவெயி டமில்லாமலுந் தரிக்குமவர்கள் துராத்மாக்கள் அவர்கள் நரகசமுத்திரத்தில் அழுந்திக்கிடப்பார்க ளென்று பகவான்அருளிச்செய்தார் - (கஉ) அதற் குத்தகுதியாய் பாதுமபுராணத்தில்சிவன் - వక్రం విరూపంబద్ధాగ్రం - భిన్నమూలం పదచ్యుతం - విగం ధమపసంఖ్యంచ - పుణ్డ్రమాహురనర్థకం - என்று பெருமாளுடைய திருவடிகளை யெழுதுமிடத்தில் கோணலாயும் - விரூபமாயும் - நுனியில்விரல்போ னபடியேவிட்டுவிடாமல்குறுக்குப்படத்திருத்து கையும் - மூலமானராமாநுஜனுக்குந் திருவடிக ளுக்குஞ் சம்மந்தப்படாமல் புருவந்தெரியும்படி விச்சித்தாயும் பாதமாகிய ராமாநுஜனில்லாமலும்- பரிமளமில்லாத திருமண்தரிக்கையும் கணக்கில் லாததிருமண்தரிக்கையும் -அதாவது கேசவாதிபன் னிரண்டுதிருநாமங்களுக்கும்பன்னிரண்டுதிருமண் தரிக்கவேண்டியது - அதற்க்குச்சாவதாநமில்லாவி டில் கேசவன்என்றதிருமண்நெற்றியிலுந் தாமோ தரனென்றதிருமண்பிடறியிலுந் தரிக்கவேண்டிய து - இப்படிக்கில்லாமல்நாலு-மூன்றுதங்களுக்கு இஷ்டமானபடிதரிக்கையும் நரகத்தையுண்டாக்கு மென்றுஉமைக்குச் சிவன்சொன்னது பிராமண ளுக்குபாடமாயிருக்கும்.

(கக) பாத்மோத்திரத்தில் - கக - ம் - அத்தி யாயத்தில் - వృత్తంవిరూపంబద్ధాగ్రం - భిన్నమూ

లంపదచ్యుతం - అశుభ్రం రూక్షమాసక్తం - తథానం
గులికల్పితం - విగంధమపసవ్యంచ - పుణ్డ్రమాహు
రనర్థకం - ఆరభ్య నాసికామూలం - లలాటాంతం
లిఖేన్మృదా - సమారభ్య భ్రువోర్మధ్య -మంతరా
ళం ప్రకల్పయేత్ - என்று வட்டமாயும் அதாவது
மண்டலமாயும் - பதுமபீடத்துக்குந் திருவடிக
ளுக்குஞ்சம்மந்தியாமல் நடுவேபுருவந்தெரியும்ப
டியாயும் பீடமானராமாநுஜனில்லாமலும் வெண்
மையில்லாமலும் மெல்லீசாயும் பக்தியுடனேத
ரிக்காமல் விரோதத்தினால்தரிக்கையும் விரலினால்
எழுதாமலும் பரிமளமில்லாததிருமண்ணும் - அப
சவ்வியமாய் தரிக்கையும் நரகத்தையடையும்படி
பண்ணுமென்றுசொன்னார்.

(௩௪)பின்னுமந்தப்புராணத்தில்-వర్తులంతిర్య
గచ్ఛిద్రం - హ్రస్వం దీర్ఘంతతంతను - వక్రం
విరూపం బద్ధాగ్రం। ఛిన్నమూలంపదచ్యుతం - అశు
భ్రం రూక్షమాసక్తం - తథానంగులికల్పితం - విగం
ధమసంఖ్యంచ। పుణ్డ్రమాహుర్నిరర్థకం - என்
று-வர்த்துலமானவட்டமாயுங்-குறுக்கேயிழுத்தும்-
நடுவெளியில்லாமலும் - மெல்லீசாயும் மிகுந்தநி
களமாயும் பாதமில்லாமல்தரிக்கையும் வெண்மை
யில்லாததிருமண்தரிக்கையும் பக்தியில்லாமல் வி
ரோதத்தால் தரிக்கையும் விரலினால்தரிக்காமல்மற்

றென்றிருல்தரிப்பதும் நிரர்த்தகம் அதாவதுபிரயோஜனமில்லையென்றபடி-திருமண்காப்பிருல் பிரயோஜனமில்லாவிடில் - అవశ్యమనుభోక్తవ్యం- కృతంకర్మ శుభాశుభం-నాభుక్తంక్షీయతే కర్మ కల్పకోటిశతైరపి - என்று அவனவன்பண்ணின புண்ணியபாபகன்மங்களை அவசியமனுபவிக்கவேணுமென்றும் நூறுகோடிகல்பமாறுலும்பகவத்கடாக்ஷத்தாலல்லது அவைநசிப்பதில்லையென்றுஞ்சாஸ்திரஞ் சொல்லுகையால் - పాపేన పాపమనుదతి- என்றுசுருதிசொன்னபடியே நரகம் சித்தம்.

(௩௫) பிரம்மாண்டபுராணத்தில்- అష్టాక్షరాజపీనైవ - హ్యపవిత్రోమదర్చకః - పాదహీనోర్ధ్వపుండ్రశ్చ - రౌరవంనరకంవ్రజేత్ - என்று அஷ்டாக்ஷரத்தை திருமண்காப் பணியும் போது ஒருக்கால் ஜபியாதவர்களும் - அதாவது அதில் சொன்ன நமப்பதத்தை ஜபியாதவர்களும் - பவித்திரமில்லாமல்என்னையர்ச்சித்தவர்களும் - பாதமில்லாதபுண்டரத்தைவைத்தவர்களும் ரௌரவநரகத்தை யடைகிருர்களென்றும்.

(௩௬) మత్పాదాకృతిపుండ్రాణి- వినాపీఠంకృతానిచ-నకదాపిప్రసన్నస్స్యామ్-ధ్రువంజ్యేష్ఠాప్రసీదతి என்று என்னுடையபாதாகிருதியானபுண்டரத்தை

பதுமபீடமில்லாமல் வைத்தவர்களையும் - நானொருக்காலுஞ் சந்தோஷிக்கிறதில்லை - மூதேவிசந்தோஷிப்பாள் இது சத்தியமென்றும் அருளிச்செய்தார்.

(ருஎ) பிரம்மாண்டபுராணத்தில் - యేన ధారయతే మత్యోర్ధ్వపుండ్రమాత్మకం భిన్నమీదృశం - తంత్యజామిమరాత్మానం - మదియాజ్ఞాతిలంఘినం తస్మాతీ మత్ప్రాప్తిమిచ్ఛద్భిః - వైష్ణవైర్విమలాశయైః - మూర్ధ్వపుండ్రమిదం ధార్యం - సత్యస్సారమోచనం - என்று என்னுடைய பாதாகிருதியாய் பீடமானராமாநுஜனுடனே யிப்போதுசொன்ன கிரமத்தில் யார்தரிக்கவில்லையோ அவர்களை என்னுடைய ஆக்கினையை அதிலங்னம்பண்ணினதுராத்மாக்களென்று நான்தியஜித்துப்போடுவேன் — ஆகையால் வைஷ்ணவர்களாயும் விமலாளாயும் - அப்போதே சம்சாரத்தை விமோசனம்பண்ணி என்னையடையவேணுமென்ற ஆசையுடைத்தாய் என்னையிச்சித்தவர்கள் சுருதி ஸ்ரீபாஞ்சராத்திர புராணங்களில் சொன்னபடியேபாதபுண்டரந்தரிக்கவேணுமென்று பகவான் அருளிச்செய்ததாவிளங்குகின்றது.

(ருஅ) பாதபுண்டரமுதலிய சின்னங்கள்வைத்தவர்களுடைய பிரபாவங்களைமுன்னமேபிருகு - அத்திரி - காசியபர் - நாரதாதிகள் அருளிச்செய்தபோதினுமிதில் முக்கியமாய்பாதபுண்டரம்வைத்த

வர்களுடையமஹாத்மியங்களைத் தெரிவிக்கிறோம்-பிரம்மாண்டபுராணத்தில் சநத்குமாரவசனம்-
కిం వేదైః కిం తపోభిశ్చ - కిం యజ్ఞైస్తీర్థసేవనైః - స
పాదపద్మమాత్రేణ - మమాభేదాద్విజాశ్చతే -
என்று வேதங்களைப் படித்ததினாலுந் - தபசுகளினாலும் - யக்கியங்களினாலும் தீரத்தயாத்திரைகளினாலும் பிரயோஜனமில்லை - பாதமாகியராமாநுஜனோடுகூடினபுண்டரந்தரித்தமாத்திரத்தினாலே என்னைப்போலேசங்கசக்கரங்கள் முதலானபஞ்சாயுதங்களைத்தரித்து-పరమం సామ్యముపైతి - என்று
ந்(தன்னாக்கித்தன்னின்னருள்செய்யுந்தலைவன்என்றுந்)-தன்னைப்போலே சமானத்துவத்தை யடைவிப்பிக்கிறானென்றும்உபயவேதங்களிலுஞ்சொல்லுகிறபடியேஎனக்குச்சமானமாவர்கள் என்றுபகவானருளிச்செய்தார்.

(௩௧) புராணத்தில்-యో గర్భవైష్ణవో నిత్యం-
ధరేత్పుండ్రం సపీఠకం - కులకోటిసముత్తార్య - స
రేశో భవతిధ్రువం- என்றுகருவிலேதிருவுடையவர்களுக்குக்கர்ப்பவைஷ்ணவாளென்றுபேர்-அப்படிப்பட்டகர்ப்பவைஷ்ணவர்களில்எவர்கள்இடைவிடாமல் பீடமாகியராமாநுஜனுடனே ஊர்த்துவபுண்டரந்தரிக்கிறார்களோ அவர்கள்மோக்ஷத்தையடைகிறதுமன்றியில்கோடிகுலத்தையும் நரகத்தில்நின்

றுந் தாண்டுவிப்பிக்கிறார்கள்பின்னும் நித்தியசூரிக ளை நியமிக்கப்பட்டவர்களாயு மிருக்கிறார்கள் - இ துசத்தியம் என்று முன்னோர் அருளிச்செய்திருக்கி றார்கள்.

(சய) பதுமபீடத்தை ராமாநுஜனென்று அ டிக்கடிச்சொல்லுவதின்கருத்து- சென்றாற் குடை யாமிருந்தாற்சிங்காசனமாம்- நின்றால்மரவடியாம் நீளகடலுள் - என்றும்—புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம்புல்கும் - அணையாந்திருமாற்கரவு-எ ன்று திருவனந்தாழ்வானனவர் எம்பெருமான் சென்றால்குடையாயும் - இருந்தால்சிம்மாசனமா யுமிருக்கின்றதாய் ஆழ்வாரருளிச்செய்கையால் பி ராட்டியையும்பெருமாளையும்பிரதிஷ்டைபண்ணு ம்போது பதுமாஸனத்திலேபிரதிஷ்டைபண்ணும் படி சிற்பம்முதலியசாஸ்தரங்களில்சொல்லியிருக் கின்றபடியே தென்னாசாரியாள் ராமாநுஜனுட னேபிரதிஷ்டைபண்ணுகிறார்கள் – மற்றவர்கள்ரா மாநுஜன்சம்மந்தம்வேண்டியதில்லையென்று பாத பீடமில்லாமல் பிரதிஷ்டைபண்ணுகிறார்கள்-இவர் களுக்கு - எம்பெருமானார்சம்மந்தமில்லையென்று பின்னாலே வசனபூருவிகமாய்ச்சொல்லுவதினாலே விசிதமாகும்.

(சக) ஒருவிஷயத்தில் சம்சயம்வந்தால் பிரத் தியக்ஷம்பிரமாணம் ஆகமாதிகளாலே நிச்சயிக்க வேண்டும் - பிரமாணமென்ற சுருதிகளினாலும் ஆ கமமான ஸ்ரீபாஞ்சராத்திரபுராண வசனங்களாலு ம் பதுமபீடமான ராமாநுஜனுடனே தரிக்கவே

ணுமென்று நிச்சயமாயிருக்கின்றது - பிரத்திய க்ஷத்தாலும் பூருவர்கள்பீடபுண்டரத்தைநிச்சயித் திருக்கிறதெங்ஙனேயெனில் - பிரத்தியக்ஷபரமபத மானகோயிலில்திருமங்கைமன்னன்செய்தகைங்க ரியங்களானதிருமதிளிலும்திருமடைப்பள்ளி- திரு மடைப்பள்ளியின்கிணறு-அமுதுபாறை-சேனைமு தலியார் சந்நிதிக்கடுத்த விரசைக்கிணற்றிலும் - உ டையவர்நாட்டியஜயஸ்தம்பத்திலும்-பெரியபெரு மாள்திருநெற்றியிலும் - ராஜகோபுரத்தில்ஸ்தம்ப ங்களிலும்அந்தஉத்திரங்களிலும்-வாஹனங்களிலு ம்-திருத்தேர்முதலான திருமண்காப்புக்குறியுள்ள விடங்களிலும் - திருமலையில்மனுஷியாளாலேபிர வேசிக்கக்கூடாத ஆனந்தநிலைவிமானத்திலும் பெ ருமாள்கோயிலில் ஆத்தான்ஜீயர் செய்தருளிய ம காமண்டபத்திலும் ஆத்தான்ஜீயர் சாஸனத்திலும் தாதாசாரியர் செய்தருளின நூற்றுக்கால் மண்ட பத்தில் கூர்மத்தின்னெற்றியிலும் அழகியமணவா ள ஜீயர்கைங்கரியங்களான நாச்சியார் மண்டப ம் திருமதிளிலும் ஆக - சஉ - இடங்களிலும்க ண்டகோபாலராயன்கட்டியமதிள் அடிவாரங்களி லும் எல்லைக்கல்லிலும் திருநாராயணபுராணத்தில் உடையவர்கைங்கரியஞ்செய்தவிடங்களிலும்உடை யவருடையமடத்தின்வாசற்படியிலும் - வேதபுஷ்க ரணியில்(தத்தாத்திரேயர்)ஸந்நிதியிலும் - அங் கேதனுஷ்கோடிவெளியில் தோரணவாசலிலும்— வாஹனமண்டபத்தில் சிலாரூபமான ஆனைகளின் முகங்களினும் - அழகியசிங்கர்மலைக்குப்போறவழி

யிலுள்ள மண்டபங்களினும் - பஞ்சபாகவத்தா ள் க்ஷேத்திரத்திலும் - சாளக்கிராமத்தில் ஸ்ரீபாத தீர்த்தவாசலிலும் - வடுகநம்பிஸந்நிதிவாசலிலு ம் - தொண்டனூர் ஏரியிலும் - உடையவர் எழுந் தருளியிருந்த காட்டழகியசிங்கர் ஸந்நிதியிலும்- நம்பிதம்பிரான்ஸந்நிதிவாசலிலும் - உடையவரு டைய அநுஷ்டானக்குளத்திலும் - நயனக்ஷேத்தி ரத்திலும் - அஷ்டதீர்த்தங்களின் மண்டபங்களி லும் - ஸாத்துக்கடாவில்பழைய அக்கிராரத்துக் குப்போகிறவழியில் தோரணவாசலிலும் - அகோ பிலத்தில்கோபுரத்வாரத்திலும் - செஞ்சியில்மூன் கலாபத்தில்நம்பெருமாள்எழுந்தருளியிருந்தபோ து கட்டியிருக்குங் கோபுரபிரகாரமண்டபங்களி லும்;ஆழ்வார்களவதாரஸ்லங்களானஆழ்வார்திருந கரியில்திருப்புளி-திருக்கோபுரமுதல்திருமண்காப் புக்குறியுள்ளவிடங்களெல்லாவற்றிலும்-பேயாழ்வா ர்அவதாரஸ்தலமானதிருமயிலையில்கேசவன்-மாத வனர் ஸன்னதிகளிலும் - பூதத்தார் அவதாரஸ்தல மான திருக்கடன் மல்லையிலும் - பெரியாழ்வார் அவர்திருமகளார் ஆண்டாள் அவதார ஸ்தலமான ஸ்ரீவில்லிபுத்தூரிலும் - திருமழிசையிலும் குல சேகராழ்வார் அவதார ஸ்தலமான திருவனந்த புரத்தில் ஸ்ரீபலிமண்டபத்திலும் - அதைச்சார்ந்த திருவாட்டாறு-திருவண்பரிசாரம் ஸ்ரீஜனர்த்தனத் திலும் - குலசேகராழ்வார்காலம்முதல் அங்கே வ ழங்குகிற நாணயங்களானவராகன்மாடைகளிலும் திருப்பாணாழ்வார் அவதாரஸ்தலமான உறையூரி

லும் - தொண்டரடிப்பொடியாழ்வார் அவதாரஸ்தலமான திருமண்டங்குடியிலும் - திருமங்கையாழ்வார் - அவதாரஸ்தலமானதிருவாலிதிருநகரியிலும் ஆசாரியாள் அவதாரஸ்தலங்களான நாதமுனிமன்னார்கோயிலில் உடையவரால்பிரதிஷ்டைபண்ணப்பட்ட ஸ்ரீமன்நாதமுனிகள்திருநெற்றியிலும்-அவர் திருப்பேரனார் ஸ்ரீஆளவந்தார்கோயிலில்எழுந்தருளியிருந்த(மடமான) பெரியநம்பிதிருமாளிகையிலும் ஆளவந்தார்ராஜ்ரீகஞ்செய்யும்போது வழங்கினவராகன் மாடைகளிலும் - திருக்கோட்டியூரில் நம்பிஸந்நிதியிலும்- திருக்கச்சிநம்பி ஸந்நிதியிலும் - (ஸ்ரீபெரும்பூதூரிலுங் ஸ்ரீரங்கக்ஷேத்திரமான கோயிலிலுந்திருநாராயணபுரத்திலும்உடையவர் விபவமாயெழுந்தருளியிருக்குங்காலத்தில் எழுந்தருளப்பண்ணிய) உடையவர் விக்கிரஹங்களின் திருநெற்றிகளிலும் - ஸ்ரீபெரும்பூதூர்கோபுர த்வாரத்திலும் - உடையவருடையசிஷியாளானஎம்பார்அவதாரஸ்தலமானமதுராமங்கலத்திலும்- கூரத்தாழ்வான் - முதலியாண்டான் அவதாரஸ்தலமானகூரத்திலும்முதலியாண்டான் ஸந்நிதியிலும் அவர்வம்சாளான கந்தாடையார்களெல்லாரிலும்- பட்டர்வம்சஸ்த்தர்யாவரிலும் மணவாளமாமுனிகள்மடத்திலும் அவருடையசிஷியாளான வானமாமலைஜீயர்மடத்தார் அனைவரிலும் - பிரதிவாதிபயங்கரம் அண்ணன் - கோயில்கந்தாடை அண்ணன்- எறும்பி அப்பா இவர்களுடைய வம்சஸ்த்தரும்- வேதாந்தசாரியர் அவதாரஸ்தலமான காஞ்சிபுரத்

திலும் - (கோயில் ஸ்ரீபெரும்பூதூர் திருவெவ்வுளூர்) இந்த திவ்விய தேசங்களில் எழுந்தருளியிருக்கின்ற வேதாந்தாசாரியர் உச்சவவிக்கிரஹங்களின் திருநெற்றிகளிலும் பாதபுண்டரமான ரேகைகளுண்டாயிருக்கின்றதுகள் - ஸ்ரீவில்லிபுத்தூரில் எழுந்தருளி யிருந்த வேதாந்தாசாரியர் விக்கிரஹத்துக்கும் பாதபுண்டரமுடைய ரேகையிருந்தது அந்தவிக்கிரஹத்தை பீடமில்லாத்திருமணிதாரிகள் பின்னபடுத்திப்போட்டார்கள்-திருநாராயணபுரத்தில் வடமாசாரியாளுக்குக் குருவானஆதிவண்சடகோப ஜீயர்திருநாட்டுக்கெழுந்தருளித் திருப்பள்ளி படுத்திருக்கிறவிடத்திலும்அப்படியேதிருஎவ்வளூரில் ஆதிவண்சடகோபஜீயர்மடத்திலும்-பாதபுண்டரசுதைஸ்தாபித்திருக்கிறார்கள்- ஸ்ரீரங்கத்தில் திருமங்கைமன்னன் செய்தருளியதிருமண்காப்பைக்குறித்து அவ்விடத்துநியாயாதிபதிநூறுதிருநக்ஷத்திரஞ்சென்ற வடகலைஎதீசுவரனை வரவழைத்து இந்ததிருமண்யாரா லே செய்விக்கப்பட்டதென்று கேழ்விகேட்டு திருமங்கையாழ்வாராலேயென்று அவர்சொல்ல அவர் உங்களுக்கு குருதானுவென்று கேழ்விகேட்டு ஆமென்றுஅந்தஎதீசுவரர்சொல்லஆகில் ஸ்ரீரங்கஸ்த்தலந்தென்னுசாரியர்களதென்று தீர்ப்புச்செய்தார் - அத்தைக்கண்டு(காஞ்சீபுரத்தில்பிரசித்தநூதனமாய்ப்புண்ணியகோடிவிமானத்தின்பேரில் இப்போதிய-தாதாசாரியாரேற்படுத்தியதுபோல)த்திருக்குடந்தை திருவயிந்திரபுரம்முதலான சில்திவ்வியதேசங்களில் வ

டகலையாசாரியாள் ஒருபாதாகிர்தியாய்ப் பீடமில்லாமல்ஏற்படுத்தினபோதிலும் அவைகள்முன்சொன்ன சுருதிஸ்மிருதி - ஸ்ரீபாஞ்சராத்திர புராணவசனங்களுக்கும் பூருவர்களுடைய ஆசாரங்களுக்கும்விருத்தமென்று இந்தப்பிரமாணங்களையறிந்தவர்கள் நினையாதிருக்கமாட்டார்கள் - శిఖాపుణ్డ్రం చసూత్రంచ । సమాయాచారమేవచ - పూర్వైరాచరితంకుర్యాత్ . అన్యథాపతితోభవేత్ . என்றுசிகை - புண்டரம் - யக்கியோபவீதம் - சமயாசாரங்களைப்பூருவர்களாலே அனுஸ்டித்தபிரகாரம் அனுஷ்டிக்கவேணுமென்றும் அந்நியதாசெய்தவர்கள் பதிதராவர்களென்றும் பிரமாணங்கள் சொல்லுகின்றன - கீழ் அனேகபிரமாணங்களாலும் பாதஹீனமான திருமண்காப்பைதரித்தவர்கள் நரகத்தை யடைகிறார்கள்என்றும் பீடமாகிய ராமாநுஜனுடனே திருமண்காப்பைத் தரித்தவர்கள்விஷ்ணுவுக்கு வல்லபாளாயிருப்பார்கள்என்றும் கோடிகுலத்தையுத்தாரணம் பண்ணுகிறார்களென்றுஞ் சொல்லுகின்றோம் - இந்த ஹிதஞ்சொன்னவர்களை நிந்தித்தவர்களும் இந்தபிரமாணங்களின்படி திவ்வியதேசங்களில் பிரதிஷ்டைபண்ணியிருப்பதை இடித்தவர்களும் குருவின் விக்கிரஹத்தை உடைத்தவர்களும் அவர்களுக்குஸ்ஸஹகரிக்கிறவர்களும் எந்த லோகத்தை யடைவர்களோ புத்திமான்களுக்குத் தன்கடையே விசிதமாகும்-

இப்போது சொன்னதிவ்வியதேசங்களில் ஆழ்வார்களும் ஆசாரியர்களும் பாதபுண்டரத்தைச் சுருதிகளினும் - ஸ்ரீபாஞ்சராத்திரபுராணங்களினுஞ் சொல்லியிருக்கிறபிரகாரம் ஸ்தாபித்திருக்கிறார்கள் - அவைகளில் திருநாராயணபுரத்தில் செல்வப்பிள்ளையை உடையவர் ஜீர்ணோத்தாரணம் பண்ணி அவ்விடத்தில் - ௰உ - சம்வத்ஸரம் எழுந்தருளியிருந்தபடியாலும் - அப்படியேநம்பெருமாள் கோயிலில் - ௬௰ - சம்வத்ஸரங்களும் - அதற்கு அருகேதிருவெள்ளறையில் - ௰உ - சம்வத்ஸரம்மடங்கட்டி அங்கே காலக்ஷேபஞ் செய்துகொண்டிருந்தபடியாலும் - நாதமுனிமன்னார்கோயிலில் ஸ்ரீமந்நாதமுனிகளை உடையவர் பிரதிஷ்டைபண்ணினபடியாலும் - இவ்விடங்களில் பாதபுண்டரத்தை உடையவரே ஸ்தாபித்தருளினபடியால்முன்சொன்னபிரமாணங்களை யறியாதவர்களும் உடையவர்ஸ்தாபித்திருக்கின்றதே வேதப்பிரமாணமென்று அறிந்துகொள்ளலாம். இதுவரையில் திரவிடவேதம், கீர்வாணவேதத்தோபாதி அனுதினென்றும்- தென்கலையாருக்கேவைஷ்ணவத்வஸித்தி என்றும் -மோக்ஷத்திலிச்சையுடையவர்களுக்குத் தென்கலையாருடையஸ்ரீபாததீர்த்தமே உஜ்ஜீவனமென்றும் - பாதபுண்டரந்தரித்தவர்களும் அவர்களுடையஸந்ததிபராளும் பரமபதத்தில் நித்தியசூரிகளை நியமிக்கும்படியையும் பாதமில்லாதவர்கள்நரகத்தையுமடைகிறார்களென்றும்-

இப்படிபாதபுண்டரந்தரிக்கும்படிசொன்னசுருதியின் அர்த்தத்தை ஸ்ரீபாஞ்சராத்திரத்தில் பகவான் - சாண்டில்லியர் - வசிஷ்டர் - நாரதர் - பிருகு - அத்திரி - காசியபர் - வியாஸர் - சிவன் முதலான பரமருஷிகளும் - வேதாந்ததேசிகரும் - அவரவர்கள்சொன்னபுராணங்களினும் சுலோகங்களினுஞ்சொல்லியிருக்கின்றார்களென்றும் - அந்தப்பிரமாணங்களின்படியே ஸ்ரீரங்காதிதிவ்விய க்ஷேத்திரங்களில் குலசேகராழ்வார் - திருமங்கையாழ்வார் - ஸ்ரீயாளவந்தார்-எம்பெருமானார் முதலானவர்களும் ஸ்தாபித்திருக்கிறார்களென்றுஞ் சொன்னோம்.

வேதாந்ததேசிகர்நாளில் பின்ன-ஸம்பிரதாயமாய்ச்சிலகிரந்தங்கள்அவர்உண்டாக்கினபோதினும் பாதபுண்டரத்தைத்தரிக்கும்படிசொன்னசுருதியை உதஹரித்திருக்கிறரேயொழிய பாதமில்லாதபுண்டரந்தரிக்கும்படியாய் தேசிகருக்கும் பிள்ளைலோகாசாரியருக்கும் நடந்தபிரசங்கத்தில் எங்குஞ் சொல்லவில்லை.

தேசிகர்தாமருளிச்செய்தகிரந்தங்களில் மஹார்த்தங்களை வெளிப்படுத்தக்கூடாதென்றும் - அதற்கு அதிகாரிகளில்லை என்றும்மந்தாதிகாரிகளுக்குத்தகுதியாய்க்கர்மக்கியானபக்திகள் மோக்ஷத்துக்குபாயமென்றுஞ் - சேதனனுடைய முயற்

சியினாலே ஈசுவரனுடைய கிருபையுண்டாகிறதெ ன்றும் - சூத்திராதிகளுக்கு மோக்ஷமடையஹே துவில்லை என்றும் - இவ்விதங்களில் சிலகிரந்தங் கள்செய்தருளினார். - அதற்குப்பிள்ளைலோகாசாரி யர் - லோகத்தார் ஏர்க்கவே மோக்ஷசாஸ்திரங்களை யறியாமல் (யானே என்னையறியகிலாதே யானே யென்றனதேயென்றிருந்தேன்) என்றருளிச்செய்த படியே யான் எனதென்னுமபிமானந் தவிராம லிருக்கின்றார்கள் என்றும் - வேதஅத்தியயனதிமு கத்தாலே பகவத்லாபத்தைப் பெறுவர்களென்று ஈசுவரன் தன்னருளால் கொடுத்த பிராம்மணஜன் மத்தை அபிமானித்துக்கொண்டு விஷ்ணுபக்தர் களை இழிவாக நினைத்து அத்தாலே, மாதுருயோனி பரீக்ஷை பண்ணபாபத்தை யடைவர்களென்று சொன்னபடியெ நரகத்தையடையஹே துவாகிற படியாலும். பரமகாருணிகத்தாலெவேதவேதாந் தங்களில் அதிரஹஸியமாகச்சொன்ன அர்த்தவி சேஷங்களை பிள்ளைலோகாசாரியர் ஸ்ரீவசனபூஷ ணத்தில் அருளிச்செய்திருக்கின்றதை இதில்சிலது பிரமாணபூர்வமாய் பிரகாசம்பண்ணுகிறோம்.

லோகத்தாருடைய அனர்த்தத்தில் வியஸன மும் அர்ச்சாவதாரத்தில் உயிர்நிலையுண்டென்ற பிரதிபத்தியும் ஸ்ரீவைஷ்ணவர்களைக்கண்டால் ப ந்துக்களைக் கண்டதுபோல் பிரீதியுமுண்டானால் தனக்கு பகவத்கடாக்ஷமுண்டென்று நினைக்கலா மென்று சாஸ்திரஞ்சொல்லியிருக்கின்றதாய் ஷ

டாஸனபதியான நஞ்சீயர் அருளிச்செய்தபடியா ல் இப்போது ஈசுவரன் நிரஹேதுககடாக்ஷத்தா லே ஆத்மாக்களை உஜ்ஜீவிக்கப்பண்ணுகிறனென் று சுருதிபுராணங்கள் ஆழ்வார்கள் ஐக்கியகண்ட மாயருளிச்செய்திருக்க தங்களுடைய முயற்சி யால் மோக்ஷத்தையடைகிறேமென்றும் - பிரபத் திக்கு ஸாதனமுண்டென்றும்-பிராம்மணஜன்மத் துக்கேமோக்ஷமுண்டென்றும் - இதரவர்ணத்தில் அவதரித்தபாகவதர்களை நிந்தித்தும் இவ்விதங்க ளில் அனர்த்தப்பட்டுநசித்துப்போவதைநினைத்து தங்கள்முயற்சியினால் மோக்ஷத்தை யடையமாட் டார்களென்றும் ஈசுவரனுடையநிர்ஹேதுககடா க்ஷம்பெற்றவர்களுக்கேமோக்ஷமெளிதினில் கிடை க்குமென்றும் - பிரபத்திக்குஸாதனஞ்சொல்லில் ஈசுவரன்கைவிடுவன் என்றும் - இதரவர்ணத்தில் அவதரித்தபாகவதாளுக்கே மோக்ஷமுண்டென்று ம் பிராமணவர்ணத்திலிருக்கும் பாகவதர்களுக்கு மோக்ஷபிரதி பந்தங்களனேகமுண்டென்றும் ஆ தலால் இதரவர்ணத்தில் அவதரித்தபாகவதாளுடை ய அபிமானத்தாலே பிராம்மணவர்ணத்தில் அவ தரித்தவர்கள் மோக்ஷத்தையடையும்படி சாஸ்திர ஞ்சொல்லியிருக்கின்றது முதலான சிலவிஷயங்க ளைத்தெரிவிக்கிறேம்.

ஈசுவரன் நிர்ஹேதுககிருபையால் இவ்வாத் மாக்களை ரக்ஷிக்கிறனென்று பிள்ளைலோகாசாரி யரும் வேதாந்த தேசிகர் உத்தரதசையில் அருளி ச்செய்தவைகளையும் பிரகாசம்பண்ணுகிறேம்.

ஸ்ரீயப்பதியானவன் ஸ்ரீவைகுண்டத்தில் நித்தியர்முக்தர்களாலே சேவிக்கப்பட்டு ఏష హ్యేవా నందయాతి - என்று அவர்களை ஆனந்திப்பித்துக் கொண்டிருக்கையிலும் அவர்களைப்போல் நித்தியானந்தத்தையடையும்படியான பிராப்தி- லீலாவிபூதியிலுள்ள வர்களுக்கும் ஒத்திருக்கவும் இவர்கள் மூலப்பிரகிர்தியில் லயமாகிக்கிடக்கிறதசையில் ஈசுவரன் கிருபைபிரஸரித்து சுருதி సఏకా కీనరమేత - என்று அந்தநித்திய சூரிகளுடைய கலவியில் இன்பமடையாமல்தனியிருப்பாய் -(பற்றிலனீசனு முற்றவுநின்றனன்) என்கிறபடியே அவர்களிடத்திலிருக்கின்ற பற்றெல்லாம் நித்தியஸம்ஸாரிகளிடத்தில்வைத்து சுருதி బహుస్యాం ప్రజాయాయేతి என்றும் - மனுஸ்மிருதியில் సయేవస్వయముద్బభౌ என்றுந் தம்முடைய பரமநிர்ஹேதுககிருபையாலே மூலப்பிரகிர்தியில் ஆவேசித்து విచిత్రా దేహసంపత్తి- రీశ్వరాయ నివేదితుం-పూర్వమేవకృతా బ్రహ్మణా - హస్తపాదాది సంయుతా- என்றும் (சிந்தையினோடு கரணங்கள்யாவுஞ்சிதைந்துமுன்னாள் - அந்த முற்றாழ்ந்தது கண்டவையென்றனக்கன்றருளால் தந்தவரங்கள்) என்று

ம் கரசரணுதி அவயவங்களையும். హన్తుం ఏంతే ను స్పృశతీవ వేత్తుమితో - మానం ప్రదీపమివ కారుణికో దదాతి என்கிறபடியே நல்லது தீயதையறியும்படி திருவிளக்கைப்போலமோக்ஷசாஸ்திரங்களையும் இவர்கள் பிரார்த்திக்கவன்றிக்கே நிர்ஹேதுக கடாக்ஷத்தாலே கொடுத்தான் - இவ்வர்த்தத்தை ஆழ்வார் திரவிடவேதத்தில் (ஆக்கை கொடுத்தளித்த கோனே குணப்பரனே) என்றும் - (அறியாதன வறிவித்தவத்தா) என்றும் அருளிச்செய்தார் - பட்டர்- అచిదవిశేషితాన్ ప్రళయసీమని సంసరతః. కరణకళేబరైర్ఘటయితుం దయమానమనాః - என்றுபிரளயார்ணவத்தில் அசித்தான காஷ்டபாஷிணங்களுக்குச் சமானமாய் மூலப்பிரகிர்தியில் வசித்துக்கொண்டிருந்த ஆத்மாக்களுக்கு ஈசுவரன் தன்னுடைய நிர்ஹேதுககிருபையாலே கரசரணம் முதலான அவயவங்களைக் கொடுத்தானென்றருளிச்செய்தார் - வேதாந்ததேசிகரும்பெரியவாச்சாம்பிள்ளை திருவடிகளில் ஆசிரயித்தபின் 4 - అచిదవిశేషితాన్ జన్తూనవలోక్య జాతనిర్వేదా కరణకళేబరయోగం వితరసి వృషశైలనాథ కరుణే త్వం - என்று அசித்துக்கு விசேஷமில்லாமல் ஆத்மாக்கள் அனர்த்தப்படுவதை திருவேங்கடமுடையான் கண்டு தம்முடைய நிரஹேதுககிருபை

யாலே கரணகளேபரங்களைக் கொடுத்தானென்றருளிச்செய்தார்-வடகலையாரென்ற ஸ்ரீவைஷ்ணவர்கள் மூலப்பிரகிர்தியில் கரணகளேபரங்களை ஈசுவரன் தன்னுடைய நிர்ஹேதுககிருபையால்கொடுத்தானென்ற விஷயத்தில் ஸம்சயமில்லை - பின்பு மோக்ஷத்தையடைகிறதற்கு ஸஹேதுகமென்கிற தங்கள் முயற்சியால் அடையவேணுமென்று வாதிக்கிறார்கள் - அப்படி தங்கள் முயற்சியால் மோக்ஷத்தை யடையமாட்டார்களென்றும் நிர்ஹேதுககிருபையால் மோக்ஷத்தை யடைகிறார்களென்றும் சுருதிசொல்லியிருப்பதை தெரிவிக்கிறோம்.

கடவல்லி முண்டகோப நிஷத்தில் - నాయమాత్మా ప్రవచనేనలభ్యో - న మేధయా - నబహునాశ్రుతేన - என்று ஈசுவரனானவன் சாஸ்தராப்பியாஸத்தாலே லபிக்கப்பட்டவனல்லன் மேதைஎன்றகருமகியானத்தினாலும் வெகுசுருதமென்ற வேதத்தாலும் லபிக்கப்பட்டவனல்லன் - என்று ஸ்வயத்தனத்தால் மோக்ஷமடைகிறோமென்றவர்களுக்கு ஒருநாளும் மோக்ஷங்கிடையாதென்று சுருதிசொல்லிற்று - యమేవైషవృణుతే తేనలభ్య-స్తస్యైషాత్మా వివృణుతే-తనూంస్వాం - என்றுஇந்தஸர்வேசுவரன் எவனைவரிக்கிறானோ அவனாலேலபிக்கப்பட்டவன் - இந்தஸர்வேசுவரன்எவனை

வரிக்கிருனோ அவனுக்கு ஏஷ: - ஸ்வகீயையான தன்னதான - தநூம் - திருமேனியை - விவ்ருணுதே கொடுக்கிருனென்று-சொல்லுகையால்தென்னுசாரியர்களே பரமபதத்தையடைகிருர்களென்றுசுருதிசொல்லிற்று -இந்தச்சுருதியைத்திருவாய்மொழியில் இரண்டாம்பத்தில் - நான்காந் திருவாய்மொழியில் இரண்டாம் பாசுரத்துக்கு முப்பத்தாருயிரப்படி வியாக்கியானத்திலும் பின்னுமந்தப்பகவத்விஷயத்தில்அனேகவிடங்களிலு முதஹரித்திருக்கின்றது - பின்னும் ஸ்ரீவசன பூஷணத்தில் - (இவ்வர்த்தத்தை வேதபுருஷன் அபேக்ஷித்தான்) என்றும் அருளிச்செய்தார் - இந்தவாக்கியத்துக்கு மணவாளமாமுனிகள் செய்தவியாக்கியானத்திலும் இந்தச்சுருதியை யுதகரித்திருக்கிருர்.

இந்தச்சுருதியில்- யமேவைஷ வ்ருணுதே தேநலப்ய: என்று இந்த ஸர்வேசுவரன் எவனைவரிக்கிருனோ அவனுலேலபிக்கப்பட்டவன் - என்று சொன்னபடியே ஆழ்வார் திருவாய்மொழியில் (அறியேனமற்றருளென்னையாளும்பிரானுர் - வறிதேயருள்செய்வார் செய்வார்கட்குகந்து) என்றுதான்கிருகிருபைசெய்யப்பட்வர்களுக்குஉகந்துவெறுமமெயருள்செய்வனென்றருளிச்செய்தார் - இதர்க்குவெதாந்ததேசிகர் பூருவதசையில் (செய்வார்கட்கென்றது) பிரபத்திசெய்யப்பட்டவர்களுக்கென்று அர்த்தம் அருளிச்செய்தார் - அதர்க்குப் பிள்ளை

லோகாசாரியர்(ஸ்ரீவசனபூஷணத்தில்)அப்போது வழிதேயென்றவிடஞ் சேராதென்று கண்டித்துப் போட்டார் -பின்னும் வாதிகேஸரி அழகியமணவா ளஜீயர்செய்தருளிய அஷ்டாதசஸம்வாதம் - என் ற கிரந்தத்தில் இந்தகட்சிக்கு- ప్రియతమయేవహి వరణీయోభవతి - என்று ஈசுவரன் ஆத்மாக்களி டத்தில் பிரியதமத்வத்தினலே அதாவது அத்யந் தங்கிருபையாலே வரிக்கத்தக்கவனுயாகிருன் என் று சொல்லுகையால்இந்தச்சுருதிக்குந்தேசிகர்சொ ன்னது விரோதமென்றருளிச்செய்தார்.

இப்படி சுருதியின்கருத்தையும் இன்னம் அடி யில் விவரிக்கிறபுராணங்களின் கருத்தையுந் தெரி வித்தபின்பு அந்தத்தேசிகர்தாமேதென்னுசாரியர் கள் ஸம்பிரதாயத்தில்பிரவேசித்து (சங்கல்பசூரி யோதயம்) என்றகிரந்தத்தில்- మిథఃకలహంకల్పనా విషమవృత్తిలీలాదయా - పరిగ్రహణకౌతుకః ప్రథితపారవశ్యః ప్రభుః - స్వలక్షితసముద్గమే సుకృతలక్షణేస్త్రచిత్ - ఘుణాక్షరలిపిక్రమాదుపనిపాతినః పాతినః - என்று எம்பெருமானுக்கு லீலையென் றுந்தயை என்றும் இரண்டுஸ்திரிகள் - இவர்களில் தயை என்றவளிடத்தில் பிரசித்தமானபாரவசியத் தையுடைத்தாய் - தம்மால் யாரைரக்ஷிக்கவேணு மென்றுலக்ஷியம்பண்ணுகிருனே அந்த ஆரம்பத் தில் குணுக்ஷதி லிபிக் கிரமத்தில்-அதாவதுபுழுக்கு

றித்ததை எழுத்தாக்குவானைப்போலே அக்கியான சுகிர்தங்களைக்கல்பித்துத்தன் சமீபத்தை யடையும் படிபண்ணுகிறவன் என்னையும் ரக்ஷிக்கக்கடவன் என்றருளிச்செய்தார் - இப்படி கீர்வாணவேதத்திலுந் திரவிடவேதத்திலும் அடியில்விவரிக்கிறபுராணங்களிலுஞ்சொன்னவர்த்தங்களைத்தேசிகர்திருவுள்ளம்பற்றி நிர்ஹேதுகக்ருபையால் ஈசுவரன் ஆத்மாக்களை ரக்ஷிக்கிறானென்று அருளிச்செய்தபடியால் ஸஹேதுகத்தால் அதாவது தங்கள்முயற்சியால் மோக்ஷமடைவர்கள் என்றபக்ஷத்தைதேசிகரும்முன்னமே கண்டித்திருக்கிறார் - முன்சொன்னசுருதியின்கருத்தைப் புராணங்களில் சொல்லியிருப்பதையுந் தெரிவிக்கிறோம்.

ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் - ఏవం సంసృతి చక్రస్థే - భ్రామ్యమాణేస్వ కర్మభిః - జీవేదుఃఖాకులేవిష్ణోః - కృపాకాప్యుపజాయతే - என்றுஇந்தப்பிரகாரம் ஸம்சாரமாகிற சக்கரத்திலே தங்கள் கர்மங்களினாலே சுழன்றுகொண்டு துக்கங்களிலே வியாகூலப்படுகிற ஜீவனிடத்திலே விஷ்ணுவினுடைய நிர்ஹேதுககடாக்ஷமுண்டாகிறதாய் ஸ்ரீபராசர பகவான் அருளிச்செய்தார்.

மற்றொருபுராணத்தில் - ఈశ్వరస్య చసౌహార్దం - యదృచ్ఛాసుకృతంతథా . విష్ణుకటాక్షమద్వేషం . ఆభిముఖ్యంచసాత్వికై - స్సంభాషణంషడై

తాని - హ్యాచార్య ప్రాప్తి హేతవః - என்றுஞ்சுவா
ணுக்கு ஸௌஹார்த்தகுணமென்றொரு மஹாகு
ணமுமுண்டு - அ[illegible]ர சாஸ்திரபரிசயம்பண்ணாத
துஷ்ட இருதயத்தையுடையவர்கள் விஷயத்தில்
மடிமாங்காயிடுவாரைப்போலும் புழுக்குறித்ததை
எழுத்தாக்குவாரைப்போலும் ஒருவன் பேசும்
போது கிராமத்துக்குந் திவ்வியதேசத்துக்கும்-
பகவன்னாமத்துக்கும் மனுஷியன்பேருக்குந் தா
ரதம்மியமறியாமல் சொன்னதுபோலொத்தது
களைப் பிடித்து என்னூரைச்சொன்னாய் - என்
பேரைச்சொன்னாய் - என்னடியார்க் கொதுங்
க நிழல்கொடுத்தாய் அவர்கள் விடாயைத் தீர்த்
தாய் என்றுமாப்போலே சிலவற்றை யேறிடுகிற
குணங்கள்அந்தக்குணத்தினாலே யாதிருச்சிகம் பி
ராஸங்கிகம் - ஆனுஷங்கிகம் என்ற அக்ஞான சு
கிர்தங்களைக்கல்பித்து - பொன் வர்த்தகன் பொன்
னையுரைகல்லிலே யுரைத்துமெழுகாலே திரட்டி
ஆபரணமாக்குமாப்போலே அனேகம் ஜன்மங்க
ளில் முன்சொன்னபடியேகற்பித்து ஒரு ஜன்மத்
தில் ஜாயமானகடாக்ஷமென்று ஒருகடாக்ஷஞ்செ
ய்து - அத்தாலே அத்வேஷத்தையுண்டாக்கி - அ
தாவது பகவத்பாகவதவிஷயமென்றால்துவே ஷி
யாதகுணம் - அதற்குப்பின்பு ஆபிமுக்கியத்தை
யுண்டாக்கி - அதாவதுபகவானை யாசிரயிக்கையில்
இச்சை - அதற்குப்பின்பு ஸாத்வீகாளுடைய ஸம்
பாஷணத்தையுமுண்டாக்கி - அதற்குப்பின்பு ஆ
சாரியப்ராப்தியையு முண்டாக்குகிறானென்றுதெ

ளிவாகச் சொல்லுகையால் வேதவிரோதங்களாய் வாதிக்குமவர்கள் அந்தஜாயமானகடாக்ஷம் பெரு தவர்களென்று அறிந்துகொள்ளலாம்.

மார்க்கண்டேயபுராணத்தில் - జాయమానం హి పురుషం - యం పశ్యే న్మధుసూదనః - సాత్విక స్సతువి జ్ఞేయ - స్స వై మోక్షార్థ చింతకః - என்றுபிறக்கப்பட்டசிசுவை எந்தமதுசூதனனாலேபார்க்கப்படுகின்றதோ அந்தச்சிசு ஸாத்வீககுணத்தையும்நல்ல விசேஷ கியானத்தையும் மோக்ஷத்தில்சிந்தையும் உடைத்தாயிருக்கின்றதென்று மார்க்கண்டேயர் சொன்னார்.

காருட்புராணத்தில் ஸ்ரீரங்கமாஹாத்மியத்தில்அசுவத்ததீர்த்தபிரபாவத்தில் - నిర్హేతుక కటాక్షేణ - మదీయేన మహామతే - ఆచార్యవిషయాకారా త్ - ప్రాప్నువంతి పరాంగతిం - என்று என்னுடைய நிர்ஹேதுக கடாக்ஷத்தினாலே ஆசாரியவிஷயீகாரத்தை யடையும்படிபண்ணுகிறேன் - என்று பகவானுஞ் சொன்னபடியே ஆழ்வாரும் - திரவிடவேதத்தில் மயர்வறமதிநல மருளினன் என்றும் - நடுவே வந்துய்யக்கொள்கின்ற நாதன் என்றும் யாதொட்டி யென்னுள்ளிருத்துவமென்றிலன் தானொட்டிவந்தென் றனிநெஞ்சை வஞ்சித்தூ தொட்டி நின்றென்னுயிரிற் கலந்தியல் வானொட்டுமோ யினியென்னை நிகழ்க்கவே என்றும் - கண்டாயேநெஞ்சே கருமங்கள்வாய்க்கி

ன்றோர் - எண்டானுமின்றியேவந்தியலுமா-றுண்டானையுலகேழுமோர்மூவடி-கொண்டானைக்கண்டனைநீயுமே என்றும் - மாறிமாறிப்பல்பிறப்பும் பிறந்தடியையடைந்துள்ளந்தேறி-யீறிலின்பத்திருவெள்ளம்யான்மூழ்கினன் என்றும்-ஆவாரார் துணையென்றலை நீர்க்கடலுளழுந்தும் நாவாய்போலப் பிறவிக்கடலுள் நின்று நான்றுளங்க தேவார்கோலத்தொடுந்திருச்சக்கரஞ்சங்கினோடும் ஆவாவென்றருள் செய்தடியேனோடுமானானே - என்றும் - இசைவித்தென்னையுன்றாளிணைக்கீழிருத்துமம்மானே - என்றும் - உணர்விலும்பரொருவனை யவனதருளாலுறப் பொருட்டென - னுணர்வினுள்ளே யிருத்தினேனதுவுமவனதின்னருளே - என்றும் - இன்றென்னைப்பொருளாக்கித் தன்னையென்னுள்வைத்தான் அன்றென்னைப் புறம்போக்கப்புணர்த்ததென்செய்வான்-குன்றன்னதிகழ் மாடங்கள்சூழதிருப்பேரான - ஒன்றெனக்கருள்செய்யவுணர்த்தலுற்றேனே - என்றும்இப்படி முதல்திருவாய்மொழிதொடங்கிக்கடைசிவரைக்கும்ஈசுவரன் தன்னுடைய நிர்ஹேதுககடாக்ஷத்தாலே தம்மைரக்ஷித்தானென்று அருளிச்செய்து இன்றைக்கு என்னை ஒருபொருளாக்கின நீ அன்றென்னைப்புறம் பாக்கினது என்னகாரணம் - என்றுகேழ்க்க-அதற்கு ஈசுவரன்மறுமொழியில்லாமல் (அமந்திரோத்ஸவகோஷிம்போலே) ஆழ்வாரே அதுகிடக்கட்டும் - உமக்குநாங்கொடுக்கப்போகிற பரமபதத்தையும் அதற்குப்போகிறஅர்ச்சராதிமார்க்கத்தை

யும் பார்க்கவில்லையோவென்றுசூழ விசும்பணிமு
கில் என்ற கடைசிதிருவாய்மொழியில் அர்ச்சராதி
மார்க்கத்தைக்காட்டினான் - அமந்திரோத்ஸவகோ
ஷமாவது கலியாணத்தில் புரோஹிதனுக்கு மந்தி
ரந்தோன்றுவிடில் மேளவாத்தியம்பண்ணச்சொ
ல்லுகை(புந்தியிற்புகுந்து தன்பால் ஆதரம்பெருக
வைத்தவழகன்)என்று தொண்டரடிப்பொடியா
ழ்வார் - இப்படி சிருஷ்டியினாதியிலும்பிறப்புஆத்
மாபஹாரிகளாய்சம்ஸாரத்தில் வர்த்திக்கிற காலத்
திலும் ஈசுவரன் தன்னுடைய நிர்ஹேதுககடாக்ஷ
த்தினாலே ரக்ஷிக்கிறானென்று நினையாதவர்கள் நீ
சரென்று திருமங்கையாழ்வார் - (மறங்கிளர்ந்த
பெருங்கடல்நீருறைந்து றைந்துபரந்தேறியண்ட
தப்பால் - புறங்கிளர்ந்தகாலத்துப் பொன்னுலகு
மேழினையுமுழில்வாங்கி - அறங்கிளர்ந்த திருவயிற்
றிலகம்படியில்வைத்தெம்மை யுய்யக்கொண்ட -
நிறங்கிளர்ந்த கருஞ்சோதிநெடுந்தகையை நினையா
தார் நீசர்தாமே) என்றருளிச்செய்தார் - இதனால்ந
டுவேவந்துய்யக்கொண்டானென்றுஅர்த்தமாமோ
வென்னில் - ஆம் - எப்படி என்னில் - முன்சொ
ன்ன சுருதிபுராணங்களின்படியாலும் ஆழ்வார் ந
டுவேவந்துய்யக்கொள்கின்ற நாதன் என்றருளிச்
செய்தபடியாலும் அவ்வர்த்தத்தையேயிவர் எம்
மையுய்யக்கொண்ட நிறங்கிளர்ந்த கருஞ்சோதி)
என்றருளிச்செய்தபடியால்நிர்ஹேதுக கடாக்ஷத்
தால் ஈசுவரன்ரக்ஷிக்கிறானென்று நினையாதவர்கள்
நீசரென்றுஅருளிச்செய்தார்.

வேதாந்தங்களில் மோட்சத்துக்குபர்யமாய் கருமகியானபக்தி - பிரபத்தி - ஆசாரியாபிமானம் - என்கின்ற ஐந்து மார்க்கங்களை விதித்திருக்கின்றதுகள்-இவைகளில் (கருமமாவது) - யக்கியந்-தானம்-தபசு-ஸந்தியாவந்தனம் - பஞ்சமஹாயக்கிடம் - அக்கிஹோத்திரந் - தீர்த்தயாத்திரை - புண்ணியக்ஷேத்திரவாஸங்- கிருத்ஸனஞ் - சாந்திராயணம் - புண்ணியநதிஸ்தானம் - விரதஞ் - சாதுர்மாஸிய ம்- பலமூலஅசனம் -அதாவது பழங்கிழங்குகளால்ஜீவிக்குதல்- சாஸ்திராப்பியாஸம் - ஸமாராதனம்- ஜபந்- தற்பணதிபதினெட்டுவிதகருமங்களும் அனுஷிடிக்கை (கியானமாவது) ஹிருதயகமலத்தில்ஸர்வேசுவரனை சங்கசக்கரங் கிரீடமகரகுண்டலங்களுடனே லக்ஷ்மீஸஹிதமாய ஸாதனபுத்தியாலே சார்வகாலமும் பாவனைபண்ணுகை - இதுவைகைவல்லியத்துக்குப் பிரதான ஸாதனமாயிருக்கும் - (பக்தியாவது) நல்லபுதல்வர்- மனையாள்- இல்லமாகியவீடு - நிலம் - மாடு - இவைகளிலிருக்கிற ஆசைகளையெல்லாமறுத்து ஈசுவரனிடத்தில் தைலதாரையைப்போல அவைகளிலுண்டானபக்தியை ஒருமடைப்படுத்தி இடைவிடாமல் நினைக்கை - இம்மூன்றுஞ்சாதனபுத்தியாயனுஷ்டிக்கையால்அதுஸ்வரூபவிரோதமென்று கழிப்பார்கள் -(பிரபத்தியாவது) பிராட்டியைமுன்னிட்டு ஈசுவரன்திருவடிகளையே மோக்ஷத்துக்கு உபாயமாகப்பற்றி அவனைச்சரணாகதிபண்ணுகை- ஆசாரியாபிமானமாவதுபாகவதாளுடைய அபிமானத்திலே ஒதுங்கியிருக்கை.

இவைகளில் முதல்சொன்ன மூன்றுமார்க்கங்களும் இந்திரியங்களைஜயிக்கவேண்டும் அருமையாலும் - ஜயித்தாலும் வேதாந்தங்களில் - అహంమపిన మమ - భగవత యేవాహంమస్మి - என்றுநானும் எனக்குரியனன்று- பகவானுக்கே நான்சேஷபூதன் என்றும் - இவ்வர்த்தத்தைத்திருவஷ்டாக்ஷரத்தில்நமபதத்திலுஞ் சொல்லியிருக்கையால் சேஷத்துவஸ்வரூபத்துக்கு விரோதமாயிருக்கும் - எப்படி என்னிலகருமங்களைச்செய்யும்போது(அஹங்கரிஷ்யே) என்றுசங்கல்பித்துக்கொண்டு நான்கருமஞ்செய்கிறேனென்று சொல்லவேண்டுகையால்நான் எனதென்ற அஹங்காரமமகாரங்களிரண்டும்-மோக்ஷத்துக்குவிரோதமாகையால் இம்மூன்றையுந் தியாச்சியகோடியில் சேர்த்திருக்கிறார்கள்.

மேலும்சுருதியில் నకర్మణా - నప్రజయా - ధనేన - త్యాగేనైకే అమృతత్వ మానశుః என்றுகருமத்தினலும் புத்திரனலுந்- தனத்தினலும்மோக்ஷத்தை யடையமாட்டான் இவற்றைவிடுகையாலேயே அமிர்தமான நித்தியத்துவத்தை யடைகிறனென்று சுருதிசொல்லிற்று.

இம்மூன்றுமார்க்கங்களையும் ஸ்ரீ கீதையில்கண்ணன் ஒன்றுக்குஆறு அத்தியாயங்களாக மூவாறு பதினெட்டு அத்தியாயங்களாலே அர்ச்சுனனுக்கு படதேசித்தான்- இதைக்கேட்டு இந்திரியங்களை ஜயி

த்த மஹாருஷிகளில் - தலைவனான - அர்ச்சுனன் - చంచలం హి మనః కృష్ణ என்று ஒய்ஸ்வாமி என்மனது சஞ்சலத்தோடு கூடினதாயிற்றே இவைகளை நான் அனுஷ்டித்துத் தலைக்கட்ட வல்லனேனோவென்றுசோகித்தான்- தன்னையிச்சித்த ஊர்வசிக்குவயிற்றைக்கீன்றுகாட்டி இந்தமாம்ஸத்தை யேனிச்சிக்கிறாயென்று முறைகூறினவனுக்கனும் இந்திரிய ஜயம்பண்ணி யனுஷ்டிக்க மாட்டேனென்றான் - அதன்பேரில்கண்ணன் - సర్వ గుహ్య తమం భూయశ్శృణు మే పరమం వచ - ఇష్టోసి మే దృఢ మితి తే - తతో వక్ష్యామి తే హితం - என்றுவேதத்தில்பரமரஹஸியமாயிருந்துள்ள பிரபத்திநிஷ்டையை யுபதேசிக்கிறேன்என்று సర్వధర్మాన్ పరిత్యజ్య - మామేకం శరణం వ్రజ - என்றுகீழ்பதினெட்டு அத்தியாயங்களில் சொன்னகருமஞானபக்தி யோகங்களை நன்றாகவிட்டு என்னையொருவனையே சரணமாகவடையென்றும் நான்உன்னுடைய ஸமஸ்தபாபங்களில்நின்றும் விடுவித்துமோக்ஷவீட்டைத்தருகிறேன் பயப்படாதே என்றும் முன்சொன்னசுருதியின்அர்த்தத்தைஅருளிச்செய்தான்.

புராணத்தில் యమో వైవస్వతో రాజ - యస్తవైష హృది స్థితః - తేన చేద వివాదం చేత్ - మాగంగాం మా కురూన్ గమ - என்றுபிர்ம்மருத்திராதிகளை நிய

மித்து உன்ஹிருதயத்திலிருக்கும் ஸ்ரீமந்நாராயண னுடைய சொத்தானஉன்னை நான்என்னதென்றுவிவாதம் பண்ணுமலிருப்பாயாகில் கங்கைமுதலிய புண்ணிய தீர்த்தங்களில்படியவேண்டாமென்றும். திரவிடவேதத்தில் - ஆழ்வார் - நெறிகாட்டிநீக்குதியோ என்று கருமகியானபகதிகளைக் காட்டிஎன்னை நீக்கநினைக்கிருயோ வென்றும் - யாதானும்பற்றி நீங்கும்விரதத்தை நல்லீடுசெய்யும்) என்றுகருமாதிஉபாயங்களைப் பற்றிநீங்கும் விரதத்தையனுஷ்டிக்கிருர்களென்றும் அருளிச்செய்தார்கள்.நம்மாழ்வார்(மற்ெருன்றில்லை சுருங்கச்சொன்ேனமா நிலத்தெவ்வுயிர்க்குஞ் சிற்றவேண்டா சிந்திப்பே யமையுங்கண்'உர்களந்தோ) வென்றுசிற்றுதலசிதறுதலாய் அத்தால்பெருக்கஒருவியாபாரம் பண்ணவேண்டாம். அதாவதுகருமங்களிற் சேர்ந்த தபசுமுதலான வியாபாரங்களைச் செய்யவேண்டாம் சிந்திப்பேயமையு மென்றருளிச் செய்தார் - இதற்கு வியாக்கியானமாய்த் திருமங்கை யாழ்வார் (ஊன் வாடவுண்ணு துயிர்காவலிட்டுவுடலில் பிரியாப் புலனைந்து நொந்து தாம் வாடவாடத் தவஞ் செய்யவேண்டாத மதாவிமையோருல காள்கிற்பீர் - தில்லைத்திருச்சித்திர கூடஞ்சென்று சேர்மின்களை) என்று பரம பதத்தைத்தங்கள் சுவாதீனமாயாளுமிச்சையை யுடையவர்கள் சரீரம்வாடும்படி யுண்ணுமல் பஞ்சேந்திரியங்களைக் காவலிலிட்டுத்தவஞ்செய்யவேண்டாந் - தில்லைத்திரு சித்திரகூடஞ் சென்றுசேர்மின்கள் என்றருளிச் செய்தார். பெரி

யாழ்வார் (புந்தியால்சிந்தியாதோதியுருவெண்ணு ம் அந்தியாலாம் பயனங்கென்) என்றுஉடமைநா ன்என்றும் உயிராவுடையான் ஈசுவரனென்றும் மனதில்சிந்தியாமல் வேதங்களையோதுவதிஞலும் ஜபம்பண்ணுவதிஞலும்பிரயோஜனமில்லை என்ற ருளிச்செய்தார்.

ஆசாரியாளில் அருளாளப்பெருமாளெம்பெருமா ஞர் கியான ஸாரத்தில்(தீர்த்தமுயன் றுடிவதஞ் செய்தவங்கள் செய்வனவும் பார்த்தனைமுன்காத்த பிரான்பார்பதன்முன்-சீர் துவரை. மன்னனடியோ மென்னும்வாழ்வு நமக்கேய்ந்ததர்ப்பின்யென்னகு றைவேண்டுமினி .என்றுபுண்ணியதீர்த்தங்களில்மு யன்றுஆடுகிறதுந் தபசுகளைச் செய்வதும்அர்ச்சு ணனைக்கண்ணன் பார்ப்பதின்முன் - கண்ணனுக்க டிமைஎன்றவாழ்வு நமக்குக்கிடைத்தபின்பு என்ன குறைஎன்றும் - வேதாந்ததேசிகர் (ஆறுநீரில்மர் வதுஞ்ஜபமதில்மவுனம ஸ்ஹோமம் விருதங்கிந் தைரீசனருள்வஞெ ஹிருதயமேமாயனஸ்விக்னெர் முமுக்ஷு - ஸர்வந்தத்பிரயமாக விட்டவனையேதஞ்ச ம்புகுந்தாலவன் பூனைதன் சிசுவைக்கிரஹிக்கு மதுபோல்தானெநகிரண்ணுதிகிம். என்றுஇவரும் அப்படியே புண்ணியனதி புண்ணியதீர்த்தங்களில் அமர்வது ஜபம் மவுனம் ஹோமம் விரதங்களால் பிரயோஜனமில்லை ஈசுவரன் இத்தால் அறுள்செய் யான். விக்கினங்களைப் பண்ணுவான்எல்லாமவனுக் குப்பிரியமாகவிட்டவனையே தஞ்சம்புகுந்தால்அ வன்பூனைதன்சிசுவைக்கிரஹிக்கிறதுபோல தானெ

அங்கீகரியாளுே இதென்னவாச்சரியம். என்றருளி ச்செய்தார். ஈசுவரனுக்குப் பிரீதியாக விடச்சொன் னதின்கருத்து தொண்டரடிப் பொடியாழ்வார் (உன்கடைத்தலையிருந்துவாழுஞ் சோம்பரையுக த்தி)என்றுஉன் தலைக் கடையிலிருந்துவாழப்பட்ட பிரபன்னரையுகக்கிறாய் என்றருளிச் செய்தபடி யேயிவருமருளிச்செய்தார் - தேசிகர்பாசுரத்திலு மின்னமவர் அருளிச்செய்த சுலோகங்களிலும் பூனைதன் சிசுவைக் கிரஹிக்கின்றதுபோல கிரஹிப் பன் என்றும்- புழுக்குறிதத்தை எழுத்தாய்கிரஹிப் பாரைப்போல அக்கியான சுகிர்தங்களைக்கற்பித்து தன்னையடைவிப்பிக்கிறானென்றுமருளிச்செய்கை யால் தேசிகர் தென்னாச்சாரியர்களுடைய ஸம்பிர தாயத்தையுடைவரென்றுகல்விமான்களுக்குவிசித மாகும்.

இப்படிசுருதிகளிலும் இதிஹாஸமான ஸ்ரீகீதை யிலும்-புராணங்களிலும்-ஆழ்வார்களும்ஆசாரியா ளும் கருமகியானபக்தியோகங்கள்ஸ்வரூபவிரோ தமாகையால் பகவானுக்கு அனிஷ்டமாயிருக்கு மென்றருளிச்செய்தபடியால் லோகாசாரியர்ஸ்ரீவச னபூஷணத்தில்- (பிராபகாந்தர பரித்யாகத்துக்கு அக்கியானசக்திகளன்று ஸ்வரூபவிரோதமே பிர தானஹேது)வென்றருளிச்செய்தார் - திருமந்திர த்தில்மத்திமபதத்தையும். பிரதமபதத்தையும். வி சாரித்தவர்களுக்குஅவர்அருளிச்செய்ததுசரியென் றுதோன்றும்-பின்னும்தேசிகர் (ஈசனருள்வனே) வென்றருளிச்செய்தபடியால் தங்கள்முயற்சியால்

மோக்ஷம்அடைகிறோமென்று சித்தாந்தம்பண்ணு கிற பாதமில்லாத புண்டரமுடையவர்களுக்கு ஈசு வரனுடையஅருள்கிடையாதென்றும் அத்தாலவர் கள் மோக்ஷமடையார்களென்றும் விசிதமாகும்.

ஆனல் வேதங்களில் கருமாதிவுபாயங்களை விதித் திருக்கின்றதே என்னில் - அப்போது - சுருதி - శ్యేనేనాభిచరన్యజేత - என்றுசாஸ்திரவிசுவாஸ த்துக்காக (சேனவிதி) என்கிற அபிசாரக் கிரமத் தைவேதத்தில் சொன்னதென்று அந்தசூன்னியவி த்தையையுஞ் செய்யலாமேஅந்தசூனியத்தைச்செ ய்து ஒருவனைக்கொன்ருல் கோடிஜன்மங்கள் நா யாய்ப்பிறப்பனென்று சுருதுசொன்னதுபோல் கருமங்களைவிதித்து அத்தால் மோக்ஷத்தையடை யமாட்டானெறும் அந்தவேதமே சொல்லியிருக் கின்றது.

இன்னமும்சுருதியில் - జ్యోతిష్టోమేన స్వర్గకామోయజేత என்று ஸ்வர்க்கத்திலிச்சையுடைய வர்கள் ஜோதிஷ்டோமத்தினலே யஜிக்கக்கடவர்க ளென்று சொன்ன வாக்கியத்தில் நம்பிக்கைபிறக் கைக்குடலாகமுன்சேனவிதியைசொல்லித்து-அந் தசுருதிதானே-క్షీణే పుణ్యే మర్త్య లోకం విశంతి - என்று அந்தஜோதிஷ்டோமத்தின லுண்டான பு ண்ணியம் நசித்துப்போனல் மறுபடியும்பூலோகா த்தில்பிறக்கின்ருனென்றும்சொல்லித்து - இனிமீளு

தலில்லாத ஸ்தானமெத்து வென்றுவிசாரித்தவர்களு க்குசுருதி - ந ச புநராவர்த்ததே - என்றும் (மீட்சி யின்றிவைகுந்தமா நகர்)என்றும்மீளுதலில்லாதஸ்ரீ வைகுண்டமென்று உபயவேதங்களினுஞ்சொல்லி யிருக்கின்றது- இவ்வர்த்தத்தை லோகாசாரியர் - (இதுதான் பூர்வ விஹிதஹிம்ஸைபோலேவிதிநி ஷேதங்களிரண்டுக்குங் குறையில்லை - அத்தைசாஸ் திரவிசுவாஸத்துக்காகவிதித்து - இத்தைஸ்வரூபவி சுவாஸத்துக்காக விதித்த) தென்றருளிச்செய்தார்- அதுஎன்றது சேனவிதி - இதுஎன்றது - கருமாதி உபாயங்கள் - அது(தோல்புரையென்றும்இதுமற் மஸ்பரிசையென்றும்)அருளிச்செய்தார்- சேனவி திதேஹத்தைக்கொல்லும்இந்தக்கருமாதி உபாய ங்கள் அஹங்காரங்களுடனே கூடினதாகையால் இது ஆத்மாவைக்கொல்லுமென்றருளிச் செய்தா ர்- அத்தைப்பற்றி (ஸந்நியாசிமுன்புள்ளவற்றைவி டுமாப்போலே இவ்விளவு பிறந்தவன் இவற்றைவி ட்டால் குற்றம்வாரா) தென்றருளிச்செய்தார் -அ தாவது ஸந்நியாஸி யாஸ்ரமத்தில் பிரவேசித்தவர் கள் பரப்பிரம்மத்தினிட திருவடிகளில்பரநியாஸ ம்பண்ணி அதற்குமுன்புள்ள பிரம்மசரியங் - கிர ஹஸ்தாஸ்ரமங்களில்விதித்தகருமங்களைத்தியாகுந யம்பண்ணவேணு மென்று விதித்திருக்கு மசிப போலே பிரபன்னாஸ்ரமத்தில் பிரவேசித்தவனுக்ப் கருமக்கியானபக்தியோகங்களில்விதித்தவைகளோ ன்ருசுவிடவே ணுமென்றுகண்ணன் ஸ்ரீகீதையில்ச்

ரிஷ்காரமாயருளிச்செய்தான் -அத்தையேஆழ்வார்களும் பிள்ளைலோகாசாரியரும்வேதாந்தாசாரியரும் அருளிச்செய்தார்கள் -

பிரபத்திநிஷ்டையாவது-పరిత్రాణాయసాధూనాం - వినాశాయచదుష్కృతాం - ధర్మసంస్థాపనార్థాయ - సంభవామియుగేయుగే - என்று வேதங்களில் சொன்னவிசேஷிதர் மத்தைஸ்தாபனம் பண்ணுவதற்கு யுகந்தோறும் யுகந்தோறும் அவதரிக்கிறேனென்றுசொல்லிச் சேனைகளுடைய தூளுகளாலே தூஸரிதமான திருக்குழலையுந் தேருக்குக்கீழேநாற்றினதிருவடிகளுமாய்நின்றஸாரத்தியவேஷத்தோடே • మామేకంశరణంవ్రజ என்றுகீழ்பதினெட்டு அத்தியாயங்களில்சொன்ன கருமகியானபக்தியோகங்களை னன்றாகவிட்டு என்னையொருவனையேசரணமாக வடைஎன்று தாயானவள்முலைக்கடுப்பாலே பாலைத்தறையிலேபீச்சுமாப்போலே ஆத்மாக்களுடைய அனர்த்தத்தைக்கண்டுஸஹிக்கமாட்டாமல் அவர்களுடைய உச்சீவனத்துக்குக் கிருஷிசெய்ய அவதரித்தவனாகையாலே கிருஷ்ணனென்றுபேர்படைத்துத் தன்திருவடிகளைக் காட்டிஇத்தைச் சரணமாகவடை யர்ச்சுனாஎன்றுபதேசித்தது எதுவோஅதுதான் பிரபத்திஎன்றுபேர் -

మామేకంశరణంవ్రజ - என்று கண்ணன் அருளிச்செய்தது பிரம்மருத்திராதிகளை யொழிந்து என்னை யொருவனையே சரணமாகவடைஎன்பது கண்ணனுடைய கருத்தென்று பாதமில்லாத் திருமண்

தாரிகள் அர்த்தஞ்சொன்னூர்கள் - அதுசரியாகமாட்டாது - அந்தசுலோகத்துக்குக்கீழே கருமாதி உபாயங்களை யுபதேசித்து அதுசெய்துதலைக்கட்டவரிதென்ற அர்ச்சுனனைப்பார்த்து அவைகளை நன்றாக விட்டென்னை யொருவனையே சரணமாகவடை என்று சொல்லுகிறபிரகரணமாகையால். இதரதேவதைகளுடைய பிரஸங்கமில்லாமையாலும் கருமாதிஉபாயங்களை நன்றாகவிட்டென்னை யொருவனையேபற்றென்று சொன்னதற்கு விரோதிக்கிறபடியாலும் அதுசரியாகமாட்டாது - பிரபத்தியாவது (பகவத்பிரவர்த்த விரோதஸ்வப்பிரவர்த்தநிவர்த்திபிரபத்திః) என்றுபேர் - அதாவது பகவானுடைய பிரவர்த்திக்குவிரோதங்களான தங்கள்முயற்சியில் நின்றும் நிவர்த்தமாகிறதெதுவோ அது பிரபத்தி என்றுபேர்.

இந்தபிரபத்தி நிஷ்டையைக்குறித்து சுபாலோபனிஷத்தில் - మాతా పితా భ్రాత నివాసశ్శరణంసుహృద్గతి ర్నారాయణః - என்று ஸ்ரீமந் நாராயணன் இவ்வாத்மாக்களுக்குமாதா- பிதா - பிராத - இருப்பிடம். இரக்ஷகன் சிநேகிதனுகையால்மோக்ஷத்துக் குபாயமும் அவனேஎன்று சுருதிசொல்லிற்று. பின்னும் கடவல்லி முண்டகோப னிஷத்தில் ஸ்ரீமந்நாராயணனுடைய இரண்டுதிருவடிகளை உபாயமாகப் பற்றுகிறேன் என்றுசொல்லியிருக்கின்றது. இதற்குச்சுருதி (த்வயம்) என்ற மந்திரமாயுப

தேசிக்கப் பட்டதாகையால் அந்தச்சுருதியை யிதி லெழுதவில்லை ஆனால் இந்தபிரபத்தி நிஷ்டையுங் கருமெங்களில்சேர்ந்த தபோநிஷ்டையும் இரண்டும் ஒன்றாய்கணிசிக்கத்தக்கதோ இந்தபிரபத்திக்குஅ திசயமுண்டோவென்னில் - சுருதி - తస్యాన్యాస మేషాంత పసామతి రిక్త మాహుః - என்றுபரப்பிரம் மத்தைசரணாகதியா யடையப்பட்டதபஸாகையா ல்பரணியாஸமென்ற இந்ததபஸைசிலாக்கியமென் றுவேதபுருஷன்சொல்லியிருக்கின்றான்-இந்தவேத ஸாரத்தையே கீதையில் கண்ணன் என்னையொருவ னையேசரணமாகவடைஎன் றருளிச்செய்தான் - க டவல்லிஉபநிஷத்தைஆழ்வார்(அகல்கில்லேனிறையு மென்றலர்மேன்மங்கையுறைமார்பா நிகரில்புகழா யுலகமூன்றுடையாயென்னை யாள்வானே நிகரிலம ரர்முனிக்கணங்கள்விரும்புந் திருவேங்கடத்தானெ புகலொன்றில்லாவடியேனுன்னடிக்கீழமர்ந்துபுகு ந்தேனே) என்றும்.கண்ணன்கீதையில்சொன்னவர் த்தத்தை (குறிக்கொள் ஞானங்களாலெனையூழிசெ ய்தவமுங் கிறிக்கொண்டிப்பிறப்பேசிலநாளிலேய் தினன்யான்உறிக்கொண்டவெண்ணெய்பாலொளி த்துண்ணுமம்மானபின் - னெறிக்கொண்ட நெஞ் சனாய்பிறவித்துயர்கடிந்தே) என்று உறியிலேவைத் திருக்கிறவெண்ணெய்பாலைஒளித்துண்ணும்அம்மா னாலெ)பின்னேசொல்லப்பட்ட நெறியாகியபிரப த்திநிஷ்டையில் பிரவேசித்தநெஞ்சையுடையவனா ய்குறியென்கிறஅவதானத்தினாலே எச்சரிக்கையைக்

கொண்டிருக்கின்ற ஞான்யோகத்தினாலே அனேக கற்பங்கள் தபசுசெய்து அத்தாலடையும்பலமான மோக்ஷத்தை'கிறிக்கொன்டு' கண்ணன் திருவடிகளை யேஉபாயமாகக்கொண்டு 'இப்பிறப்பே' கருமகியா னங்களைப்போலே அனேகஜன்மங்களின்கடைசியி லனறிக்கே 'சில்நாளில்' முன்சொன்னவைபோல்ச ஞ்சிதபாபங்கள்நசித்தபின்பன்றிக்கேதேஹாவஸா னத்தில்'யெய்தினன்,முன்சொன்னகருமாதிகள்மந் திரலோபக்கிரியாலோபங்களால் பிர்ம்மரக்ஷஸாய் ஒருவேளைபிறக்கவும் ஹேதுவில்லாமல்பிர்ம்மாஸ் தரம்வாய்மடியாதுபோல அடைந்தேன் என்றும். (பிணக்கறவறுவகைச் சமயமுநெறியுள்ளியுரைத்த கணக்கறுநலத்தனந்தமில்லாதியம்பகவன்; வணக் குடைத்தவநெறிவழிநின்றுபுறநெறிகளைகட்டுண க்குமின்பசையறவவனுடை யுணர்வுகொண்டுணர்ந் தே) என்றுஅறுவகைச்சமயங்களிலுண்டானபிணக் குகளறும்படியாக வேதமார்க்கத்தை விசாரித்துஉ ரைத்த கணக்கில்லாதகலியாணகுணங் களையுடைய பகவானாலேஅருளிச்செய்தபிரபத்திநிஷ்டையில்வி சுவாஸமுண்டாய் ஸ்திரமாகவிருந்து அதற்குப்புற நெறிகளாகிய கருமகியான பக்தியோகங்களாகிற களைகளைவேரோடெகெல்லியெடுத்துஅதாவதுயவ ற்றைநன்றாகவிட்டுஅவனுடைய வுணர்வுகொண்டுச ம்ஸாரமென்றசமுத்திரத்தைவற்றப்பாருங்கோள் என்றும்-தேசிகரும்- శాఖానామ పరిస్థితేనమనునా

మూలేనలబ్ధాత్మకః - సత్తాహేతుసకృత్ జపేనమ

సునాకాలంద్వ యేనష్టీపన్ - వేదోత్త ౦సపహారసాగ ధిత్యాగుంభే నవిస్పృంభిత - స్వారజ్ఞో యదికచ్ఛిప స్తిభువనేనాథస్వ యూదస్యః - என்றுவேதசாகைகளின்முடிவில்சொல்லுகின்ற மூலமந்திரமானதிருவஷ்டாக்ஷரத்தில் முதல்பதத்தில் சொன்னசேஷித்வத்தையும் - மத்திமபதத்தில் சொன்ன பாரதந்திரியத்தையும் - ஆத்மாக்களுடைய ஸத்தைக்குஹேதுவாய் ஒருக்கால் ஜபித்தால் பரமபதத்தைக்கொடுக்குமதான த்வயம் என்றமந்திரத்திலேகாலங்களை நசிக்கும்படிபண்ணப்பட்டும்- శ్రీరసీపదీ స్తైః - என்று சுருதி சொன்னபடியே வேதசிகரத்தில் பிரகாசிக்கின்ற ஸ்ரீபார்த்தஸாரதியினுடைய கியானத்திலே அதிரஹஸியமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்ற வேதாந்தஸாரத்தையறிந்த - సమహాత్మా సుదుర్లభః - என்கிறபடியே அப்படிப்பட்டமஹாத்மாக்களுண்டாயிருப்பார்களாகில் அவர்களெனக்கு நாதராகிறதுமன்றியில் என்னுடையவம்சங்களுக்கும்நாதராவர்களெனறருளிச்செய்தார் - திருமந்திரத்தில் சேஷத்துவமும் பாரதந்திரியமும்முக்கியமாய்ச்சொல்லிசரமசுலோகத்தில் அவைகளுக்குவிரோதங்களான அஹங்காரமமகாரங்களோடே கூடினகருமகியானபக்தியோகங்களைவிட்டு என்னையொருவனையேசரணமாகவடைஎன்றுகண்ணனருளிச்செய்தபடியா

ல் ஸ்வயத்தினத்தால்அடைகிறோமென்றவர்களுக்
குதிருமந்திர ஜனிதஞானமில்லாமையால்தேசிக
ர்தென்னாசாரியாளை நாதாக்களென்று அருளிச்செ
ய்தபோதே வடமாசாரியர்களுக்குந் தென்னாசாரி
யாள்நா தராகக்குறையில்லை - இதற்குமாறுசொல்
லில்தேசிகர்கருத்துக்குதூரப்பட்டவர்களாவர்கள்.
இந்தசுலோகத்தில் எங்களுக்கு சம்மந்தமுண்டுஅ
த்தால்தேசிகர் ஸம்மந்தமுண்டென்றால் அப்போ
து அவர்கள்தங்களை தென்னாசாரியஸம்பிரதாயஸ்
தர்களென்றேகருதவேண்டியது -

தென்னாசாரியாள் ஒரு ஆவர்த்திசரணாகதிபண்
ணால் வட ஆசாரியாள் நாங்கள் மூன்று ஆவர்த்தி
சரணாகதிபண்ணுகிறோம்-அத்தால்நாங்கள்மோக்ஷ
மடையஹேதுவுண்டென்று சொல்லும்பக்ஷத்தி
ல் - அந்தபிறபத்தியை சாதனமாக நினைக்கையால்
அனேகம் ஆவர்த்திசரணாகதிபண்ணினாலும் மோ
க்ஷமடையமாட்டார்களென்றும் ஒரு ஆவர்த்திசர
ணமடையவேணுமென்றும் பிரமாணங்கள் சொ
ல்லியிருக்கின்றது - సకృదేవ ప్రపన్నాయ - తవా
స్మీతి చ యాచతే - అభయం సర్వ భూతేభ్యో - దదా
మ్యేతద్ వ్రతం మమ - என்று ஒருக்கால் சரணாகதி
பண்ணினவர்கள்பொருட்டுசுருதியில் - అథ సోఽభ
యం గతో భవతి - என்று பகவானை யடைந்தவர்க
ள் அபயத்தை யடைகிறார்களென்று சொன்ன

படியேஅபயத்தைக்கொடுக்கிறேன் அதுஎனக்கு விரதம் என்றருளிச் செய்கையால் தென்னுசாரியாள் ஒருகால் சரணுகதிபண்ணுவதிருலே மோக்ஷமடைகிருர்கள்என்று பிரகாசமாகின்றது. ஸ்ரீ பாஞ்சராத்திரத்தில் - చితః పరమచిల్లాభే ప్రపత్తి రప స్నోపథః - విపర్య యేతున్యవాస్య - ప్రతిషేధాయపాతకం - என்று சித்தான ஆத்துமாவுக்குப் பரமசித்தானஈசுவரன்லபிக்கும்போதுஇவன்பண்ணுகிறபிரபத்தி உபாயமாகமாட்டாது என்றும் - மோக்ஷதசையிலீசுவர னிவனைப்பெற நினைக்கும்போதுஇவனுடையபாபங்கள் பிரதிஷேதிக்கமாட்டாதென்றும் அதாவதுதடங்கல் செய்யமாட்டாதென்றும்பகவானருளிச்செய்கையால்தென்னுசாரியாள்பிரபத்தியைசாதனமாகக்கருதுவதில்லை.இவ்வர்தத்தைலோகாசாரியர் (இவனவனைப்பெற நினைக்கும்போதுவியன் பண்ணுகிறபிர பத்தியும்உபாயமன்று அவனிவனைப்பெற நினைக்கும்போது பாதகமும்விலக்கன்று) என்றருளிச்செய்தார் - இந்தஸ்ரீபாஞ்சராத்திர பிரமாணத்தால் வட ஆசாரியர்கள்பாபங்களைக் குறித்துபிராயச்சித்தம் பண்ணிக்கொள்ளுவது தியாச்சியமாய்விட்டுது. பிராயச்சித்தம்பண்ணுவதற்குப் பிராயச்சித்தம் பண்ணவேணுமென்று சொல்லுகிற பிரமாணங்களைப் பின்னுலெவிவரமாய்ச்சொல்லுகிறேம்.

பிரபத்தியை ஸாதனமாக்கிஞல் ஈசுவரன்ரக்ஷிக்

கமாட்டாறேவென்னில் ரக்ஷிக்கமாட்டானென்று
ங்கைவிடுவன்என்றும் ஞயானஸாரத்தில்(சரணாகதி
மற்றோர்சாதனத்தைப்பற்றில் - அரணாகாதஞ்ச
ணைதன்சேயை - முரணழியக் - கட்டியதுவேறே
ற்கயிறுகொண்டார்ப் பதனமுன் - விட்டபடை
போலவிடும்) - என்று சரணாகதியை ஸாதனமாக்கி
னால் சண்பககயிற்றைக்கண்ட பிரம்மாஸ்தரம் ந
ழுவினதுபோலச் சரணாகதி நழுவுமென்றருளிச்
செய்கையால் மூன்று ஆவர்த்திக்குமேல்முந்நூறு
ஆவர்த்திசாதனபுத்தியாய்சரணாகதிபண்ணினபோ
தினும் வட ஆசாரியாள் அத்தால் மோக்ஷத்தைய
டையமாட்டார்களென்று பிரமாணங்கள் சொல்
லுகின்றது - இந்தபிரபத்தியை லோகாசாரியர்
(சைதன்னியகாரியம் - ராகப்பிராப்தம்- ஸ்வரூப
னிஷ்டம் - அப்ரதிஷேதத்ஜோதக) மென்றருளி
ச்செய்தார் - அதாவது ஈசுவரன் னிரஹேதுகமா
கரக்ஷிக்கும்போது அசேதனத்துக்குந் தனக்குமு
ண்டானவாசிதோன்றவும் - ராகம்என்றபக்தியின்
காரியமாயும் - சேஷித்துவஸ்வரூபத்துக்குசிதமா
யும் - விலக்காமையை சூசிப்பிக்கைக்காகவும் - இ
வன் பிரபத்திபண்ணுவதென் றருளிச்செய்தார்-

அப்படியேதேசிகரும் - ఆతేఃష్వ శ్ఫలాతదన్య
విషయేప్యచ్ఛిన్న దేశాంతరా - వస్థాదేరనపేక్షు
ణాత్త నుభృతాంస త్యాదివద్వ్యాపిని - శ్రీరంగేశ్వ
రయామవహాత్మనియతత్వ త్వారతంత్ర్య చిత-త్వ
య్యేవత్వ దుపాయధీర పిహితస్వోపాయభావాస్తు

మే - என்று - இந்தபிரபத்தியானது ஆர்த்தப்பிர பன்னனாய் அப்போதே திருவடிகளை யடையவே ணுமென்றவர்களுக்குச் சீக்கிரத்தில் மோக்ஷத்தை க்கொடுக்குமதாய் - திருப்தபிரபன்னனுக்குத்தே ஹாவஸானத்தில் கொடுக்கப்பட்டதாய் - அக்கினி காரியங்களர்னகருமாதிகளசேதனனுடையமுயற் சியை யபேக்ஷித்திருக்குமதுபோலன்றிக்கே அத் தை ஸஹியாதாய் - ஸ்ரீரங்கனுதா நியதமான உன் னுடைய பாரதந்திரியத்துக்குசிதமானதாய் - త్వ య్యేవ - உன்னிடத்திலேயே - త్వదుపాయధీ - நீ யே உபாயமென்றகியானம் - అపిహితం - மறைக் கப்பட்ட - స్వోపాయభావం - பிரபத்தியை யுபா யமாக நினைக்கின்ற அபிப்பிராம் - మే - எனக்கு- అస్తు - ஆகக்கடவது - என்பது முன்சொன்ன ஸ்ரீ பாஞ்சராத்திரத்தில் பிரபத்தியுபாயமாகமாட்டா தென்று சொன்னதை பிள்ளைலோகாசாரியர் (வி ரஜ - என்ற ஸ்வீகாரத்தில் உபாயபுத்திதவிர்க்கிற து) என்றருளிச்செய்தார் - அந்தகருத்தை தேசி கரும் மறைக்கப்பட்டிருக்கின்ற உபாயபுத்தி எ னக்குண்டாகவேணுமென்றருளிச்செய்தார் - அ தாவது பிரபத்திப்பண்ணுவதை யுபாய்மாகபுத்தி ப்பண்ணுவது மறைக்கப்பட்டால் பிரபத்திக்குபா யமில்லைஎன்றுகருத்து- இதற்குஆழ்வாரும்(இசை வித்தென்னையுன்றுளிணைக் கீழிருத்துமம்மானே) என்றும் (ஆறெனக்குநின்பாதமே சரணாகத் தந்

தொழிந்தாய்)என்றும் (அதுவுமவனதின்னருளே) என்றும் என்னை யிசைவித்தென்கையால் சேதனனுடைய இசைவுக்குக்கிருஷிசெய்தவன் ஈசுவரன் என்றும் - அவனையே உபாயமாகவும்-இந்நன்மை அவனருளாலே யுண்டாயிற்றென்றும் அருளிச்செய்தபடியால் ஈசுவரனுடைய முயற்சியிலுண்டானபிரபத்தியை தன்முயற்சியாலுண்டானதாய் நினைத்தால் அவன்கைவிடுவன்என்றுஅருளாளப்பெருமாளெம்பெருமானாருளிச்செய்தார்.

இந்தபிரபத்தியைக்குறித்துவடவாரியர்கள்சொல்லுவது ஸ்ரீபாஞ்சராத்திரத்தில் - ఆనుకూల్యస్య సంకల్పం - ప్రాతికూల్యస్య వర్జనం - రక్షిష్యతీతి విశ్వాసో గోప్తృత్వవరణం తథా - ఆత్మనిక్షేప కార్పణ్యం - షడ్విధా శరణాగతిః - என்று சாஸ்தரங்களில்விதித்தவைகளைச்செய்தும்.விலக்கினவைகள்முழுதும் விட்டும் - ஈசுவரன்ரக்ஷிப்பனென்ற மஹாவிசுவாசமுண்டாகியும் ரக்ஷகனைரக்ஷியென்றுபிரார்த்தித்துந்தன்னுடையநைச்சியங்களைவிண்ணப்பஞ்செய்தும் இந்தஐந்துலக்ஷணங்களுண்டானபின்புஆத்மநிக்ஷேபம் என்றஆத்மஸமர்ப்பணம்பண்ணிபரந்நியாஸமென்ற சரணாகதிபண்ணவேணுமென்றும்இதற்குப்பிரமாணம் -న్యాసః పంచాంగసంయుతః - என்று பரந்நியாஸமஐந்து அங்கங்களூடனெகூடியிருக்கவேணுமென்றுசொல்வதற்கு

அர்த்தமிதுவென்றுசொன்ஞர்கள்-இதற்குத்தென்ஞரியாள்கடலில் அலை ஒய்ந்த பின்பு முத்துசலாபம்முழுக நினைப்பார்போலிருக்கின்றது-(மின்னின்னிலையில மன்னுயிராக்கைகளென்னு மிடத்திறையுன்னுமிநீரே) என்று அருளிச்செய்த மின்னின் நிலையில்லாதசரீரமாயும் - (பொய்நின்ற ஞானமும்பொல்லாவொழுக்குமழுக்குடம்பும்) என்கிறபடியேபொய்யானஞானமுந் துராசாரங்களுமுடையசரீரத்தில்மெஞ்ஞானமின்றி வினையியல்பிறப்பழுந்தி இருக்கையால்அவ்வைந்து முண்டாவதற்குமுன்னமே இறந்துபோனல் (நமன்றமர்பற்றியெத்திவைத் தெரியெழுகின்ற செம்பிஞலியன்றபாவையைப்பாவிதழுவென மொழிவதற்கஞ்சிநம்பனேவந்துன் திருவடியடைந்தே னை மிசாரணியத்துளெந்தாய்)என்கிறபடியே நரகம் சித்தமாகையால்(அவஞாதஸ்வேதம்போலெ)அதாவதுநெல்லைக்குத்தவாரம்பித்துக் கொன்டால் வேர்வை தன்கடையாயுண்டாமாப்போல பரநியாசம்பண்ணிவிட்டால்பின்புஈசுவரன்(சார்ந்தவிருவல் வினைகளுஞ்சரித்துமாய்ப் பற்றறுத்துத்தீர்ந்து தன்பால்மனம் வைககத்திருத்திவீடுந் திருந்துவான்) என்கிற படியேசாஸ்தரவிருத்தமான துராசாரங்களை பகவான் தன்கடாக்ஷத்தினலே கழித்துக்கொள்ளுவான்என்றுசொல்லிசரணுகதியைமுதல்முன்னமேபண்ணுவார்கள்.

இதுவுமனறி- చిత్తః పరమ దల్లా ఘే ప్ర ప త్రిరపినో పథిః ఃపర్యమేతు నైవాస్య ప్రతిషే ధాయపాతకం .. என்

று இவன்பண்ணுகிற பிறபத்தியான பரனியாஸம் மோக்ஷஸாதனம் அன்றென்றும் பிறபன்னனான இவனுடையபாபங்கள் மோக்ஷபிரதிபந்தகம் அன்றென்றும்அந்தஸ்ரீபாஞ்சராத்திரத்தில்தானெசொல்லுகையால் லோகாசாரியர்(இவன்அவனைப்பெற நினைக்கும்போதுஇவன் பண்ணினபிறபத்தி யுபாயம் அன்று அவன்இவனைப்பெறநினைக்கும்போது பாதகாதிகளும்விலக்கன்று) என்றருளிச்செய்தார் - ஆகையால்வடவாரியர்களுக்கு ஐந்து அங்கங்களுண்டாகப்போகிறதும் இல்லைஅவர்கள் ஸாதனபுத்தியைவிட்டுசரணாகதிபண்ணப்போகிறதுமில்லை. கியானசாரத்தில் (ஈனமிலாவன்பனொன்றுமெய்திலாமானிடனாயெல்லாவண்ணத்தாலுந்.தானறிய. விட்டார்கெளியன்விடாதார்க்கறவரியன். மட்டார்துழாயலங்கன்மால்)-என்கிறபடியே சாதனபுத்தியைவிட்டுத்தன்திருவடிகளையடையும்படி நிர்ஹேதுக கடாக்ஷத்தாலே கடாக்ஷித்தான்என்கிறவர்களுக்குஎளிமையாயிருப்பன்.ஸ்வயத்தனத்தைவிடாதவர்களுக்குமிகவுந் தூரஸ்தனாயிருப்பன்.

தசவிதவைஷ்ணவமென்று வைஷ்ணவத்தில்பத்துவிதங்களாகச்சொல்லியிருக்கின்றதுகள் - வுபயகலையாரில்இன்னார்இவ்விதஅதிகாரிகளென்று தங்களுக்குள்ளே நிச்சயித்துக்கொள்ளும் படியாய்த்தெரிவிக்கிறோம் - అద్వేషీశ్చానుకూలశ్చ దివ్యనాస్ఫుర స్తథా - చక్రాంకిమంత్రపాఠీచ - వైష్ణవశ్చ తతఃపరం - శ్రీవైష్ణవఃప్రసన్నశ్చ - ఏకాంతీసవ

మః స్తథా - పరస్మై కాంతిలివిజ్ఞేయ - దశ్చై తేష్వైష్ణ వాస్స్మృతాః - என்று அத்வேஷி யென்றும் - ஆனு கூலர்களென்றும் - திருநாமதாரிகளென்றும் - சக்கராங்கன பரர்களென்றும் - மந்திரபாடி யென்றும் - வைஷ்ணவர்களென்றும் - ஸ்ரீவைஷ்ணவர்களென்றும் - பிரபன்னர்களென்றும் . ஏகாந்திகளென்றும் - பரமேகாந்திகளென்றும் - பத்துவிதங்கள் - இவர்களில்அத்வேஷிகளாவார்- విష్ణుంలోకనియంతారం - వైష్ణవాన్ లోకపావనాన్ - దృష్ట్వా న ద్వేష్టియోమత్యః - సోద్వేషః పరికీర్తితః- என்றுலோகநியந்தாவாகிய விஷ்ணுவையும் - தங்களுடைய வீக்ஷணமான பார்வையாலும் - இரக்கத்தோடெகூடின நினைவினாலும் அப்படிப்பட்ட ஸ்பரிசத்தினாலும் மச்சியங்கள் கூர்மங்கள் பக்ஷிகள் இம்மூன்றினால் தங்கள் முட்டைகளைவிர்த்திசெய்விக்குமாப்போல் லோகத்தாருடையபாபங்களைபாவனம்பண்ணப்பட்ட வைஷ்ணவர்களையும் பார்த்துத்வேஷியாமலிருக்குமவர்கள் - உ. அனுகூலராவார் - వాసుదేవోత్సవాంశ్చైవ - మహాభాగవతాంస్తథా -అనువర్తేతయోనిత్యం-అనుకూలవ్రుదాహృతః - என்றுவாசுதேவனுடைய உச்சவத்திலும் மஹாபாகவதர்களுடையஉத்ஸாஹத்திலும்இடைவிடாமல்அனுவர்த்திப்பவர்கள் - ௩ - திருநாமதாரிகளாவார் - நினைத்தமாத்திரத்திலும் உச்சரித்த

மாத்திரத்திலும் ஸமஸ்தபாபங்களையும் நன்றாக நசிப்பிக்கும்பாவனமான விஷ்ணுவின் திருநாமத்தை தரித்துக்கொண்டிருக்குமவர்கள் - ௪ - சக்கிராங்கிகளாவார் - శ్రుతిస్మృతిపురాణేషు - విహితం చక్రధారణం - సోభిభర్తిః హరేః చక్రం - చక్రధారీస ఉచ్యతే - என்று காண்டவவேதத்தில்- తప్తంచక్రంద్విభుజేధార్యేతోర్ధ్వ ధ్వః పుండ్రమావిశేత్ - என்று சங்கசக்கரம் ஊர்த்துவபுண்டரந் துளசீமணிமாலிகைகளை தரிக்கும்படியாயும் ஆரணத்தில் - అతప్తతనూర్నతదామో అశ్నుతే - என்றும் அப்படி தப்தசக்கரந் தரியாதவர்களுடைய தனுவானசரீரத்தைக்கண்களினால் பார்க்கக்கூடாதென்றுஞ் சொல்லியிருக்கின்றபடியே சங்கசக்கரந்தரித்தவர்கள் - ௫ - மந்திரபாடிவைஷ்ணவராவார் - అష్టాక్షరస్య మంత్రస్య - స్మరణాన్ముక్తిదో హరిః - తమావర్తేత యోనిత్యం - మంత్రపాఠీస ఉచ్యతే - என்று நினைத்தமாத்திரத்தில் ஸ்ரீஹரியினுடைய திருவடிகளாகிற முக்தியைக்கொடுக்கும்படியான திருவஷ்டாக்ஷரத்தை இடைவிடாமல் ஜபிக்குமவர்கள் - ௬ - வைஷ்ணவர்களாவார் - దేవతాంతరవన్నిత్యం- శబ్దాదీనపిసత్యజః

విష్ణు (ప్రా) ప్తిఫలాకాంక్షీ - భక్త్యుపాయో హి వైష్ణవః -
என்று இதரதேவதைகளிடத்தில் திரணீகாரத்தை யுடைத்தாயிருக்கவேண்டினதுபோல சப்த - ஸ்பரிச - ரூப - ரஸ - கந்தங்களாகிற ஐம்புலன்களினு லுண்டான சிற்றின்பத்தில் குத்சிதாபுத்தி பண்ணி அதாவது துச்சமாகக்கருதி விஷ்ணுவினிடத்தில் மற்றொருபலங்களை அபேக்ஷியாமல் திருவடிகளை யடைவதுவே பலமாகக்கருதி ஈசுவரனிடத்தில் பண்ணப்பட்டபக்தியை உபாயமாகக்கருதியிருக்குமவர்கள் - எ - இதற்குமேல் ஸ்ரீவைஷ்ணவர்களாவார் - బాహ్య ధర్మనిరతాః సర్వే - సమస్త కర్మ త్యాస దాశినః - భక్తిమార్గ పుండరీకాక్షే . శ్రీ వైష్ణవ ఉదాహృతః - என்று எம்பெருமானுக்குப்புறம்பான தேவர்க்கள் - இதரமானமந்திரங்கள் - கருமை - ஞான - பக்திமுதலான இதரஸாதனங்கள் - இதரவிஷயங்களாகிய போகங்களை நன்றாகவிட்டு அதனாலெபரிசுத்தமானமனதோடேகூடி புண்டரீகாக்ஷனிடத்தில் சாதனபுத்தியன்றியில் பக்தியையுடையவர்கள். இந்தவிஷயத்தில் தென்னாசாரியாள் எல்லாம்விட்டார்களோவென்னில் இதற்குமுன்சரித்திரத்தில் பாஞ்சராத்திரபிரமாணங்களாலெ இதற்குப்பரிஹாரஞ்சொன்னோம் அதில்கண்டுகொள்வது - அ - இனிபிரபன்னராவார் - శబ్దాదీ విషయాంశ్చాపి - దేహాలాపాధిక బాంధవాః - త్యక్త్వా చార

న్యస్తభరః - సఃప్రపన్నో బ్రాహ్మతః - என்றுசப்
தாதிவிஷயங்களினும் பந்துக்களிடத்திலும் உள்ள
டான விருப்பமற்று சுபாலோபநிஷத்தில் - మా
తాపితా భ్రాతనివాసశ్శరణంసుహృద్గతిర్నారా
యణః - என்று இவ்வாத்மாக்களுக்கு ஸ்ரீமந்நாரா
யணன் மாதா - பிதா - இருப்பிடம் - ரக்ஷகன் -
சிநேஹிதனுகையால் மோக்ஷத்துக்குபாயமும் அ
வன் திருவடிகளென்று பிரபத்திநிஷ்டையைக் கு
றித்துச்சொல்லியிருக்கிறபிரகாரம் ஈசுவரனிடத்தி
ல் தன்னுடைய ரக்ஷணத்தைக்குறித்து ஸர்வபரங்
களையும் அவன் திருவடிகளில்வைத்திருக்குமவர்கள்.

கூ. ஏகாந்திகளாவார் - ఏకాంతినస్తు నిశ్చిత్య-దే
వతావిషయాంతరైః - భక్త్యుపాయం సమంకృత్వా కృష్ణ
ప్రాప్త్యైక సాధనః - என்று இதரதேவதை
களையும் இதரவிஷயங்களையும் பக்தியையுபாயமா
கக் கருதுவதையுஞ் சமானமாக நிச்சயித்துக்கிரு
ஷ்ணனையடைவதற்கு அவன் திருவடிகளையே ஸா
தனமாகக்கருதியிருக்குமவர்கள் - இவ்வர்த்தத்தை
ஆழ்வார் (ஆறெனக்கு நின்பாதமே சரணாகத்தந்
தொழிந்தா யுனக்கோர் கைமாறுநானொன்றிலே
னெனதாவியுமுனதே) என்று - ஆறென்று உபா
யம் - மோக்ஷத்துக்குபாயமாக தேவர் திருவடிக
ளையேதந்தீர் - உமக்குப்பிரதியுபகாரமெனக்கொ

ன்றுமில்லை என்றருளிச்செய்தார் - தந்தொழிந்தா என்றும் - இசைவித்தென்னையுன்றாளிணைக்கீழிருத்துமென்றும்அருளிச்செய்கையால்,தங்களுடைய முயற்சியால் அதாவது தங்களுடைய சுகிர்தத்தால் அவனை யடைகிறோமென்ற வடவாரியாளுக்கும் இந்தத்திருவாய்மொழிக்கும்சம்பந்தமில்லைஎன்று கல்விமான்களுக்கு விதிதமாகும்.

ம. பரமைகாந்திகளாவார் - దేవతాంతరశబ్దా

ద్భక్తికృష్ణాఖ్య హేతుషు - సామ్యకృత్వ ప్రమైకాం

తి - హరౌ స్వామితిబుద్ధిమాన్ - என்று முன்சொ

ன்ன இதரதேவதைகளையும் - சப்தாதிவிஷயங்களையும் - பக்தியைமோக்ஷத்துக்கு உபாயமாகக்கருதுவதையும் - அப்படியே கிருஷ்ணனையடைவதற்கு அவனையேயுபாயமாகக்கருதுவதையும் சமானமாகநினைத்து ஸ்ரீஹரியை ஸ்வாமிஎன்றுந் தன்னையவனுடைய சொத்தென்றும் நினைத்து அத்தாலெ சொத்தானநம்மைஸ்வாமியான அவனிஷ்டப்படிசெய்துகொள்ளக்கடவனென்றுநினைத்திருக்குமவர்கள்-இவ்வர்த்தத்தைஆழ்வார்(களைவாய்துன்பங்களையாதொழிவாய்களைகண்மற்றிலேன்)என்றுஎன் துன்பங்களைப்போக்குவீர்போக்காமல்நரகத்தில்தள்ளுவீர்என்க கதிலொரு அன்வயமில்லைசொத்துநஷ்டமடைந்தால் அத்தையுடைய ஸ்வாமிக்குநஷ்டமொழியசொத்துக்கு நிமித்தியமில்லை என்று தெளிந்திருக்க வேணுமென்றும்(செய்ததலை யெ

ழு நாற்றுப்போலவன் செய்வனசெய்து கொள்ள) வென்றுசெய்யென்றகழனியில் பிடுங்கப்பட்டநாற்றைஅத்தைஉடையவன் எந்தகழனியில்எறிவனோ எறிந்துநடுவனோ அப்படிநம்மைசெய்துகொள்ளக்கடவன்என்றும். பிரபன்னகாயத்திரியான நூற்றந்தாதியில் (இடுமேயினியசுவர்க்கத்திலின்னநரகிலிட்டுச்சுடுமேயவற்றைத் தொடர்தருதொல்லைச்சுழல்பிறப்பில் நடுமேயினிநம்பி ராமானுசன் நம்மைநம்வசத்தே விடுமே சரணமென்றால் மனமேநையல்மெவுதர்க்கே (என்று ஒய்மனசேஎம்பெருமானார் நம்மைசுவர்க்கத்திலிடட்டும்இன்னமும்நரகத்திலிட்டுசுடட்டும்அவ்விரண்டையுந் துடரும்படியானசுழல்பிறப்பில் நம்மைஸ்தாபிக்கட்டும்-அன்றியில் சம்ஸாரிகளைப்போலேகர்மத்தைத்தலையிலேறிட்டு நம்மைநம்முடையவசத்தில்விட்டுவிடட்டும் அவரைசரணமென்றபின்பு அவரையடைவதற்குநையாதே என்றருளிச்செய்தபடியாலும் - இயானஸாரத்தில் (உடைமைநானென்று முடையானுயிரை. வடமதுரைவந்துதித்தானென்றுந் - திடமாக - வறிந்தவன்றன்றாளிலடைந்த தர்ப்பிறனுண்டோ - பிறந்துபடும்நீள்துயரம்பின -) என்றுதன்னைசுவரனுடைய உடைமைஎன்றும் இந்தவுயிரையுடையவன் இத்தைப்பெறுகைக்காக வடமதுரையிலே கண்ணனுப்வந் தவதரித்தானென்றுந் திடமாக அறிந்துஅவனுடையதிருவடிகளில் அடைந்தபின்புபிறந்து படப்பட்ட துக்கமுண்டோவென்றும். அருளிச்செய்தபடியே தெய்ஞசாரியர்கள் திரு

மந்திரத்தில்பிரணவத்தில் சொன்ன சேஷத்துவகி யானத்தையும்-நமப்பதத்தில் சொன்ன பாரதந்தி ரியகியானத்தையுமுடையராய் ஈசுவரனுடைய அரு ளையெதிர்பார்த்துக்கொண்டிருப்பர்கள். இப் படிப்பட்டவர்களை(சோம்பரையுகத்திபோலுஞ்சூ ழ்புனல்ரங்கத்தானே) என்றுதொண்டரடிப்பொ டியாழ்வார்அருளிச்செய்தபடியேஈசுவரன்உகந்த ருளி - మాంశుచః - என்பதில்பயப்படாதே என் று அர்ச்சுனனுக்குச்சொன்னபடியேயும் -అభయం సర్వభూతేభ్యోదదామ్యేతద్వ్రతంమమ - என்றுஒ ருக்கால்சரணாகதி பண்ணினவர்கள் எப்படிப்பட் டநீசராயிருந்தபோதினும் நான்அவர்களுக்குஅ பயங்கொடுக்கிறேன் அதுஎன்னுடையவிரதம்என் றருளிச்செய்தபடியேயும் அவனுடைய அபயப்பி ரதானத்தைப்பெற்றிருப்பர்கள் - வடஆரியர்கள் திருமந்திரத்தில் சொன்ன சேஷத்துவ பாரதந்தி ரயத்துக்குவிரோதமாய் சுதந்திரக்கியானத்தையு டையராய்தாங்கள் தங்களுடைய ஸ்வபத்தினத்தா லெஅடைகிறோமென்றும் தாங்கள்செய்தபாபத் துக்குத்தாங்களே பிராயச்சித்தம் பண்ணிக்கொ ண்டுபாபங்களைப்போக்கிக் கொள்ளுகிறோமென் றும்நினைத்துபாபத்தைபோக்கிக்கொள்ளாமலும் ஸ்வயத்தனத்தால் அடையமாட்டாமலும் ஆத்மா அபஹாரம்பண்ணுகிற பிர பல்பாபத்தைமாத்தி ரம்அடையப்படுவர்கள்.

(௪௨) ஆசாரிய அபிமானமாவது - మాతృదే వోభవ - పితృదేవోభవ - ఆచార్యదేవోభవ - என்னுஞ் சுருதியில் அன்னையும் பிதாவுந் தெய்வமென்றதில் ஆசாரியனைத்தெய்வமென்று நினைக்கவேண்டுமென்றும் - பின்னும் - గురుదేవపరం బ్రహ్మ - గురు దేవ పరాయణః - గురు దేవ పరఃకామ - గురుదేవపరంధనం - గురుదేవపరాగతిః - என்பதில்குருவையேபரப்பிரம்மமாகநினைக்கவேண்டுமென்றும் - குருவையே பாராயணம்பண்ணவேண்டுமென்றும் குருவையே மிகவும் பக்திபண்ணவேண்டுமென்றும் குருவையெ பரமமானதனமாகநினைக்கவேண்டுமென்றும் - குருவையேமோக்ஷத்துக்குபாயமாக நினைக்கவேண்டுமென்றுஞ் சொல்லியிருக்கின்றது - இப்படி நினையாதவர்களைக்குறித்துப் புராணத்தில் - విష్ణోరర్చావతారేషు - లోహభావంకరోతియః - యోగురౌమానుషంభావం వుభౌనిరయపాతినౌ - என்னுஞ்சுலோகத்தின் அர்த்தத்தைக்கியானஸாரத்தில்(மானிடவனென்றுங் குருவை மலர்மகள்கோன் - ருனுகந்தகோலமுலோகென்றும் - ஊனமதாய் - எண்ணுகின்றநீசரிருவருமேயெக்காலும் - நண்ணிடுவர்கீழாநரகு) இதன்பொருள் விஷ்ணுவின் அர்ச்சாவதாரமான திவ்வியமங்களவிக்கிரஹத்தில் பஞ்சலோஹமென்றபி

ரதிபத்தியுங் குருவிடத்தில் மனுஷியப் பிரதிபத்தியும் பண்ணுகிற இருவருமே எக்காலுங் கோரநரகத்தை யடைவர்களென்றும் - (என்றுமனைத்துயிர்க்குமீரஞ்செய்நாரணனும் - அன்றுந்தன்னாரியன்பாலன்பொழியில் - நின்ற - புனல்பிரிந்தபங்கயத்தைப்பொங்குசுடர்வெய்யோன்- அனலுமிழ்ந்துதானுலர்த்தியற்று) இதன்பொருள் சமஸ்தாத்மாக்களுக்குங் கிருபைசெய்யப்பட்ட நாராயணனும்எவன்தன் ஆசாரியனிடத்தில் மனுஷியப்பிரதிபத்திபண்ணுகிறானோ அவனைத்(தாமரையையலர்த்தத்தக்கஆதித்தன்தானே நீரைப்பிரிந்தால் அதையுலர்த்துமாப்போலெ ஆசாரியனை மனுஷியனென்றுநினைத்தவனைவாடப்பண்ணு)மென்றுலோகாசாரியரும் அருளிச்செய்தபடியால் தென்னாசாரியர்கள் ஆசாரியனைத்தெய்வமென்றும்அவர்அபிமானத்தாலெபேறென்றும் நினைத்திருப்பர்கள் - மற்றவர்கள் ஸ்வயத்தனத்தா லடையப்பட்டவர்களாகையால் அவர்களுக்கு ஆசாரியாபிமானத்தால்பேறென்றிருக்கவேண்டிய நிமித்தமில்லை.

(சரு) ஆசாரியபூர்த்தியுள்ள துளம்பெருமானாருக்கேயாகையால் இவ்வர்த்தத்தை திருவரங்கத்தமுதனார்பிறபன்னகாயத்திரியில் (இராமானுசன்புகழொதுநல்லோர்மறையினைக்காத்திந்தமண்ணகத்தேமன்னவைப்பவரெ)இதன்பொருள் இராமானுசனுடையபுகழையோதும் பெரியவர்கள் வேதத்தைக்காத்துஅதைப்பூமியில்பிரதிஷ்டைபண்ணினவர்களாவர்களென்றும்- (சீர்கொண்டுபேரறஞ்செ

யீதுநல்வீடுசெறிதுமென்னும்-பார்கொண்ட மே ன்மையர் கூட்டனல்லேனுன் பதயுகமாம் - ஏர் கொண்டவீட்டையெளிதினிலெய்துவனுன்னுடைய - கார்கொண்டவண்மை யிராமானுச விதுகண்டுகொள்ளே-) என்றும்அருளிச்செய்தார்.சீர்கொண்டு என்பதன்பொருள்'பரபக்தியாவதுபகவானைத்தரிசிக்கவேணுமென்பது . பரக்கியான மாவது அவனுடனேகூடி யனுபவிக்க விச்சிப்பது - பரமபக்தியாவது கூடியனுபவிக்குங்கலவியில்பிரிவு வரப்போகிறதென்றுபயப்படுதல்' இம்மூன்றுவித பக்திகளைச் சீர் என்பது- கொண்டுஎன்பது-இப்படிப்பட்டபக்தியைக்கொண்டு-பேரறம்-பெரியதபசு - அதாவது முன்னே சுருதியில்பிர பத்தியென்னப்பட்ட தபசைச் சிலாக்கியமென்று சொன்ன அந்தப்பிரபத்தியைச்செய்து மோக்ஷத்தைஅடையவேணு மென்றவர்களுடைய கூட்டத்தில் நான் சேர்ந்தவனன்று - பின்னையெந்தநிஷ்டையில் சேர்ந்தவனென்றால் தேவரீருடையஇரண்டு திருவடிகளாகிறஅழகியவீடான மோக்ஷத்தை மேகத்துக்குச்சமானமான உம்முடையஅவுதாரியத்தினாலெ எளிதாகஅடைவேன் இதுகண்டுகொள்ளும்என்று அருளிச்செய்தபடியேதென்னாசாரியர்கள்எம்பெருமானார்சம்மந்தத்தாலெ பேறென்றிருப்பர்கள். மற்றவர்கள்பிரபத்தி நிஷ்டைக்கே சாதனபுத்தியாலேமிகவுந்தூரமாயிருப்பதினால்இந்தப்பஞ்சமோபாயநிஷ்டைக்கு எவ்வளவுதூரத்தி லிருக்கின்றார்களோ கல்விமான்களுக்கு விசிதமாகும்.

(சச)ஸ்ரீபதரிகாச்சிரமத்தில்ஈசுவரன் நரனும்நாராயணனும் அவதரித்துசிஷிய ஆசாரியக்கிரமத்தைவெளிப்படுத்தினதுபோல் இவ்வர்த்தத்தைவெளிப்படுத்துவதற்குஅந்த உடையவரேமணவாளமாமுனிகளாய்அவதரித்துளதீந்திரரான் எம்பெருமானாரிடத்தில்பக்தியுடையவரென்றுதெரியும்படியாய் எதிந்திரப்பிரவணர்என்கிறதிருநாமத்தையும் வகித்தார். இதற்குப்பிரமாணம் பிர்மாண்டபுராணத்தில் பதரிகாச்சிரம் மஹாத்மியத்தில்நரநாராயணசம்வாதத்தில்-సన్నిధానాత్ భూతపుర్యా-మహీనామీశ్వరఃకలౌ - శ్రీరామానుజరూపేణా - జనిష్యతిసతాంముదే - என்னுஞ் சுலோகத்தில் என்னுடைய நியோகத்தால் ஸ்ரீபெரும்பூதூரில் ஸர்ப்பங்களுக்குராஜனானசேஷன் கலியுகத்தில் ஸ்ரீராமாநுஜனென்றரூபத்தாலே சாதுக்களைச் சந்தோஷிப்பிக்க அவதரிக்கப்போகின்றானென்றும் - విశిష్టాద్వైతసిద్ధాంత - ప్రతిపాదనతత్పరాః - తదాశ్రయాస్సదాచారా - స్సాత్వికాస్తత్వదర్శినః - వేదాంతద్వయతత్వజ్ఞాః - భవిష్యంతిగురూత్తమాః- తథాతద్విషయేస్సర్వై - ర్దేశికైరాదృతోమహాన్ - என்னுஞ்சுலோகத்தில் விசிட்டாத்வைத சித்தாந்தம் பண்ணப்பட்டவர்களவதரிக்கப்போகின்றார்களென்றும் - ప్రపన్నసావిత్రీవక్తా - రంగనామే

తివిశ్రుతః - అష్టోత్తర శతాఖ్యాంచా - గా థాంద్రావిడీంకరిష్యతి - என்னும் பிரபன்ன காயத்திரியைச் சொல்லப்பட்டவராய் திருவரங்கத்தமுதனார் என்கிற நாமதேயத்தை யுடையவர் நூற்றெட்டுப் பாசுரமான திவ்வியமான காதைகளைச் செய்யப்போகின்றாரென்றும் - ఆవిర్భూతశ్చ సారాది ప్రముఖై రాదిపుంగవైః-నిర్మితానాం ప్రబంధానాం - చూడారత్నంభవిష్యతి- என்னுஞ் சுலோகத்தில் அவதரித்திருக்கின்றசடகோபர். பொய்கை. பூதம். பேயார். முதலான ஆழ்வார்களாலெநிர்மிதம்பண்ணப்பட்டிருக்கின்ற பிரபந்தங்களைப்பார்க்கிலுஞ் சூடாரத்தினமான பிரபன்னகாயத்திரி என்கிற நூற்றந்தாதியுண்டாகப்போகிறதென்றும்- పునశ్చవిభవే శ్రీమా - మన్నియోగాన్మహీతలే - జనిష్యతి శ్రీనగర్యాం - యతీంద్రప్రవణాత్మకః - என்னுஞ்சுலோகத்தில் அந்த ஸ்ரீமத்தான ராமாநுஜரானவர் என்னுடைய நியோகத்திஞலே பூமியில் திருநகரியிலெ எதிந்திரரிடத்திலெ பிரவணமானவரா யவதரிக்கப்போகின்றாரென்றும் - యత్ద్వయం ద్రామిడామ్నాయ-సారంభాం తేభవిష్యతి - సపవసౌమ్య జామాతా - యతిశ్రేష్ఠోభవిష్యతి- என்னுஞ்சுலோகத்தில் யாருடைய பத்தியுமான து

திரவிடவேதத்தின் ஆரம்பத்திலும் அந்தியத்திலும் உண்டாகப்போகின்றதோ அந்தப்பத்தியத்தில் சொல்லப்பட்டவர் மணவாளமாமுனிகள்என்கிற எதிசிரேஷ்டர் அவதரிக்கப்போகின்றாரென்றுஞ் சொல்லியிருக்கின்றது - பின்னும் ஸ்ரீபாஞ்சராத்திரத்தில்விஷ்ணுரகசியத்தில் பக்தர்களுடைய ஸ்வரூபத்தைச் சொல்லுகிற பிரகரணத்தில்—

శంఖశ్చక్రంగదాపద్మంశాఙ్గంసేనాధిపస్తథా -
శేషోలక్ష్మీర్యోగినశ్చ సనకాద్యా మహాజనః -
నీచయోనిషుసంజాతాః - என்னுஞ் சுலோகத்தில் - சங்கஞ் - சங்கரங் - கதை - பதுமம் - சார்ஙகம் - சேனைமுதலியார் - சேஷன் - லக்ஷ்மி - முதலானவர்கள் நீசயோனிகளிலே அவதரிக்கப் போகின்றார்களென்றுசொன்னபிரகரணத்தில் - శేషాత్మానం వరవరం - విజానీయాన్మునింగురుం - విష్వక్సేనాత్మనాజాతం - శఠకోపమునీశ్వరం - என்னுஞ்சுலோகத்திலும்சேஷன் வரவரமுனிகளென்றகுருவானமணவாளமாமுனிகளாயும்விஷ்வக்சேனர்சடகோபமுனீசுரராயு மவதரிக்கப்போகின்றதாயும் - ఘంటాత్మనాసముజ్జాతం - నిగమాంతగురుంబుధం - என்னுஞ் சுலோகத்தில் வேதாந்ததேசிகர் கண்டாவதாரமென்றுஞ் சொல்லியிருக்கின்றது - வரவரமுனிகளென்றதற்கு அர்த்தம் வராள் என்று நித்திய

சூரிகளுக்குப்பேர் - வரவரர்என்றது அவர்களுக்குத் தலைவனானசேஷினைச்சொல்லுகையால் வரவரமுனிகளென்று ரூடியாய் வழங்குகின்றது - இவர் ஆதி சேஷனென்று பகவான் ஸ்ரீபாஞ்சராத்திரத்திலும்புராணத்திலுஞ்சொல்லியிருப்பதைமஹாவித்வான்களாய் மஹத்குலப் பிரசூதாளானகந்தாடைஆசாரியபுருஷர்களாய் முன்உடையவர்ஏர்ப்படுத்தினஎழுபத்துநான்குஸிம்மாஸனபதிகளுடைய வம்சஸ்த்தர்களாலே ஸ்துத்யம்பண்ணி இவர்திருவடிகளில் ஆஶ்ரயித்துபேறுபெற்று இன்னமும்பிற்பட்டவர்களுமிவர்திருவடிகளை யாஶ்ரயித்துஉஜ்ஜீவிக்கும்படி உபதேசித்த வைகளையுந் தெரிவிக்கிறோம்-பரவாதிகேசரிபதினாங்குபாட்டாய்பணித்தஸ்ரீசைலவைபவத்தில்ஐந்தாவதுபாசுரத்தில் (மணவாளமாமுனிதாண் மருவியபேர்வாழ்ந்திடுவார். குணமாகக்கொண்மினிதைக்கூறுகேன்வாதியரோ-பணவாளரவர்கும்பகைத்தாரோபிழைப்பதில்லை.மணமுடையமந்திரமாமதிக்கண்டீர்தனியனையே)என்றும் (அற்பிசியில்திருமூலத்தவதரித்தான வாழியே- யரவரசப் பெருஞ்சோதியனந்தனென்னும் வாழியே)என்றுவாழித்திருநாமத்திலும் -(பணவாதிசேடனருள்பரனேவவதரித்த மணவாளமாமுனிவன் மலரடியை யடைநெஞ்சே)என்பதுபோல் அனேகர்அனேகங்கிரந்தங்களில்இவர் சேஷனென்று சொல்லியிருக்கின்றார்கள் - இவர்தனியனைப்பிரபந்தாரம்பத்தில் சொல்லும்படி பிர்மாண்டபுராணத்தில்சொல்லி யிருக்கின்றபிரகாரம் ஸ்ரீரங்கநாதன்

அருளிச்செய்ததாய் - எறும்பி அப்பாவென்பவர் வரவரமுனிசதகத்தில்- వేదాదౌ పూర్వముక్త్వా హరిరితి సుజనో వక్తి పశ్చాద్యథోమిత్యేవం వక్తవ్యం యే తద్వత్కుశలధరవచోనుశ్రవారంభకాలే - శ్రీశైలేశేతి పద్యం ప్రథమమథ సదా సంప్రదాయైకనిష్ఠైః- లక్ష్మీనాథేతి చేతి స్వయమిహ భగవానాద్రశాంద్రం గనాథః - என்னுஞ்சுலோகத்தில்வேதத்தின் ஆதியிலும்அந்தத்திலும்முதலில்ஹரிః என்றுசொல்லிப் பின்பு ஓம்என்றுசொல்வதுபோல்வகுளதரனுகிய நம்மாழ்வாராலே ஸ்ரீமந்நாதமுனிகளுக்குஅருளிச்செய்தநாலாயிரந் திரவிடவேதத்தின் ஆதியில் ஸ்ரீசைலேசதனியனையும் பின்பு லக்ஷ்மீநாததனியனையும் உச்சரிக்கும்படி பகவான் ரங்கநாதனருளிச்செய்ததாய்ச்சொல்லியிருக்கின்றூர்-இப்படியே முன்சொன்ன பரவாதிகேஸரி மூன்றும்பாட்டில்- (பட்டர்பிரான்முதலான பதின்மர்கலை யோதையிலுந்-திட்டமாய்த்தினந்தோறுந்திருடணிடும்வேளையிலுங் - கட்டுமுட்டாயுண்பதற்குக்கையதனீரேற்கையிலும் -அட்டதிக்கும்விளங்குரைத்தாராரியர்களனைவருமே)- இப்படிதென்னுசாரியர்களும் வடவாரியர்களுக்குக் கூடஸ்தரான ஆதிவண்சடகோபஜீயரும் அவருடையமடஸ்தரான அகோபிலமடத்தாரும்கருதியில் ఆదావంతేయతోజ్ఞావం-తంపూర్వ

సుభివాదయేత్ - என்பதில் ஆதியிலும் அந்தத்திலும்
யாராலெ கியானமுண்டாகப்பட்டிருக்கின்றதோ
அந்த ஆசாரியனை முன்னேசேவிக்கக்கடவன் என்
றபிரமாணத்தின்படியே உபயகலையாரும் பிரபந்
தாரம்பத்தில் உச்சரித்தும் மற்றுந் திருமணிடும்
வேளையிலும் அமுதுசெய்கிறதற்குக்கைகளில் நீர்
ஏற்கையிலும் உச்சரித்துக்கொண்டு வருகிறார்கள்-
அகோபிலம்மடத்தார்க்கு இந்தத்தனியன்வந்தவா
லாறு அகோபிலம்மடத்துக்குமூலபுருஷரான ஆ
திவண் சடகோபஜீயர் மணவாளமாமுனிகளுடை
ய சிஷியராய் அவரிடத்தில் பகவத்விஷயஞ் சேவி
த்தபடியால் அந்தப்பரமாசாரியனுடைய தனி
யனை அகோபிலம் மடத்தில் அனுசந்தித்துக்
கொண்டு வருகிறார்கள் - இப்படி இருக்க இப்
போது அந்தப் பரமாசாரியனுடைய மந்திர
மானதனியனையும் அவர்சம்மந்தத்தையும் வேண்
டாமென்று விட்டுவிட்டவர்களுக்குபலம் - గురు
త్యాగి భజేన్మృత్యుః - మంత్రత్యాగి దరిద్రతాం.
గురుమంత్రపరిత్యాగి - రౌరవన్నరకం వ్రజేత్-
என்னுஞ் சுலோகத்தில் குருவைத்தியாச்சியம்பண்
ணவன் எமனையடைகிறான் - மந்திரத்தைத்தியாச்
சியம்பண்ணவன் பரலோகமில்லாத தரித்திரத்தை
யடைகிறான்-ஆகியவிரண்டாலும் குருவையும்மந்
திரத்தையும்விட்டவன் ரௌரவநரகத்தையடைகி
றான் என்றுசொல்லியிருக்கின்றது - ஸ்ரீயாஞ்சரா

த்திரத்தில் - విష్ణుం ద్రవిడవేదం వా - స్వశాఖాం వా గురోత్తమం - యోనిందతిసదుర్మేధ - నరకస్థో నరాధమః - என்று விஷ்ணுவையுந் திரவிடவேதத்தையும் ஸ்வசாகையான தங்கள்தங்கள் சாகைகளையும் உத்தமகுருவையும் நிந்திக்கிறவர்கள் மூடாளென்றும் - நரகத்தில்வசிக்குமவர்களென்றும்- நரஅதமர்கள் என்றுஞ்சொல்லியிருக்கின்றது - மணவாளமாமுனிகள் உபயகலையாரில் தென்கலையாருக்கும் அகோபிலம்மடத்தாருக்கும் வேணுமானல்பரமாசாரியராயிருக்கட்டும் - மற்றவர்களுக்கும் அவர்குருவாவரோவென்னில் முன்சொன்னபாஞ்சராத்திரத்தில் சேஷன் வரவரமுனிகள்என்ற குருவென்றதில் பரமபதத்தில் கருட விஷ்வக்சேனுதிகளுக்கு குருவாகிறபோது இந்த விபூதியிலுள்ளவர்க்கு குருவாகமாட்டாரோ - இதன்றி பிரம்மாண்டபுராணத்தில் அந்தராமாநுஜர் மறுபடியும் எதிந்திரப்பிரவணராயவதரிக்கப்போகிருரென்றுஞ் சொல்லுகையால் சேஷன்உடையவாராயவதரித்ததில் ஸம்சயமில்லாததுபோல அவர் மணவாளமாமுனிகளாயவதரித்ததில் சம்சயமில்லாமல் பிரமாணங்களும் பூருவாசாரியர்களும் ஏககண்டமாயருளிச்செய்கையால் இதராளும்அவரைலோககுருவென்பதில்ஸம்சயிக்க வேண்டுவதில்லை. இன்னமும் பாரதவசனத்திலும் அவரை நிந்தித்தவர்கள் சாகுவிதமான க்ஷேமத்தையடையார்களென்றுசொல்லப்படும் - எப்படிஎன்னில் கண்ணன்-

ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம் - என்றுகியானி என்னுடை
ய ஆத்மாவென்றும் அது என்னுடையமதம் என்
றுஞ்சொன்னபடியால் உயிரை நலிந்தால் உடலு
க்குநோவும் - பின்னும் - பாண்டவாந் த்விஷஸே ரா
ஜந் மம (ப்ரா) ணாஹி பாண்டவா: - என்றுகண்ணன் தூ
துசென்றபோது துரியன்பீஷ்மாதிகளையும்என்னை
யும்விட்டு விதுரான்கிரஹத்தில்அமுதுசெய்ததென்
னென்றுகேழ்க்க - பாண்டவர்களுக்குநீ த்வேஷின
ன்ன.பாண்டவர்களுக்கு நான்விரோதியாகிலுனக்
கென்னவென்ன- அவர்களெனக்கு பிராணனென்
றுசொன்னகிரமத்தாலும் இவரை நிந்தித்தால்விஷ்
ணுவை நிந்தித்தவர்களென்று முன்சொன்னபிர
மாணசித்தம்- இதன்றியில் திருக்குறுங்குடிநம்பி
உடையவரைசிம்மாஸனத்தில்இருத்தித்வயம்என்ற
மந்திரங்கேட்டதுபோல்ஸ்ரீரங்கநாதன் இவரைசிம்
மாஸனத்திலிருத்தி திருவாய்மொழிப் பொருளைக்
கேட்டதாய் பரவாதிகேசரி அருளிச்செய்தமுதல்
பாட்டில் (கூறுகேனுலகோரேகுங்குமதோளரங்
கேசர் - மாறன்மறைப்பொருள்கேட்க மணவாள
மாமுனியை - யேறுமணைதனிலிருத்தி யிருநிலத்
திற்றுமிருந்து வீறுடனேசெவிசாத்திவிரைமலர்த்
தாளிணைபோற்றி)- என்று அருளிச்செய்திருக்கிற
படியே - மணவாளமாமுனிகளும்-(நாமார்பெரி
யதிருமண்டபமார் நம்பெருமாள் - தாமாகவந்
து தனித்தழைத்து - நீமாறன் - செந்தமிழ்வேத

த்தின் செழும்பொருளை நாடோறும் - வந்து
ரையென்னுவதே வாய்ந்து -) என்று தம்மைப்
பெரியபெருமாள் திருவாய்மொழிப் பொரு
ளை விண்ணப்பஞ்செய்ய நியமித்ததா யருளிச்
செய்தபடியால் தனக்கு குருவென்ற காரணத்தி
ஞலும் மணவாளமாமுனிகளை நிந்தித்தவர்களுக்கு
ஈசுவரனுடைய நிக்கிறஹ முண்டாகுமென்று கல்
விமான்கள் கண்டுகொள்வர்கள்.சேஷாவதாரமாந
எதிராஜர் தாமேமணவாள மாமுனிகளாய் அவதரி
த்தார் என்று ஸ்ரீபாஞ்சராத்திர புராணங்க ளில்
சொல்லியிருக்கின்றத்தை பரவாதிகேஸரி அழகி
யமணவாளஜீயர் முதலான மஹாவித்வான்களா
ன பூறுவாசரியர்கள் அருளிச்செய்தவைகளுஞ் சே
ஷாவதாரமாய் சேர்வைசாதித்தவைகளுஞ் சிலது
தெரிவிக்கிறோம் - எம்பெருமானருக்கு விஷமிட்
டதுபோல வாதிகள் இவருடையமடத்தில் நெருப்
பையிட்டபோது இவர் சேஷாவதாரமாய் வெளி
யில்வந்து சேர்வைசாதித்தருளினர் - ஸ்ரீரங்கத்தில்
உத்தமநம்பிஎன்ற ஸ்தானிகர்இவரைஇகழ்ச்சியாய்
நினைத்தபோது ஸ்ரீரங்கநாதன் அவர்சொப்பனத்தி
ல்தம்முடையசேஷனைத்தொட்டுக்காட்டிஇவர்அவ
ரென்றுஅருளிச்செய்தபின்புஅவர்இவரிடத்தில்வந்
துஅபசாரக்ஷாமனம்பண்ணிக்கொண்டார்அப்போ
துஅவருக்குசேஷாவதாரமாய்சேர்வைசாதித்ததுபி
